# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, மார்கழி 8 ல (23-12-73)ஞாயிறு ஜுல்கஃ: ஆகிர்27—புத்தகம் 27 இதழ் 17


## செல்லத் தர்புவுக்கு கொல்வின் பாராட்டு!

'இப் பேரவையில் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கக் கூடிய முறையில் கருத்து வெளியிடுவோர்களில் வவுனியாப் பிரதிநிதியும் ஒருவராகத்திகழுகிருர்.'

—தேசிய அரசுப் பேரவையில்

டாக்டர் கொல்வின்.

## சேணம் கட்டினுலும் கழுதை குதிரையாகுமா?

—பண்டிதர்

கடற்ருெழில் கூட்டுறவு சங்க இயக்குனர் சபைகளுக்கு உறுப்பினரை நியமிப்பதற்கு அமைச்சர் அவர்களுக்கு அதிகாரம் இல்லாவிட்டாலும், இந் நியமனங்களுக்கெல்லாம் தமிழ் அமைச்சர் என்று சொல்லப்படும் ஒருவர்தான், பொறுப்பாளிவர் என்பதை பகிரங்கமாக சொல்ல விரும்புகிறேன்.

'தமிழ் பகுதிகளிலுள்ள ப. நோ. கூ. சங்கங்கள் எல்லாம் அந்த அமைச்சரின் செல்வாக்கினுல் நாசமாகிப் போய்விட்டன. கடற்ருெழிலாளர் கூட்டுறவு சங்கங்களையும் அவர் நாசமாக்கவிடவேண்டாம்!

'தமிழில்' கழுதைக்கு சேணம் கட்டினுலும் குதிரையாகுமா என்ெருரு பழமொழியுண்டு. தகுதியில்லாதவர்களுக்கு, மக்களால் தெரிவு செய்யப்படாதவர்களுக்கு, மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு பதவிகளைக் கொடுத்தாலும் அவர்களை உயர்த்திவிட முடியாது. அரசாங்கம் செய்திருப்பது போல அமைச்சர் பதவி அரசியல் அதிகாரி பதவி, கடற்ருெழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பதவிகள் போன்றவற்றைக் கொடுத்தாலும் அவர்களை உயர்த்த முடியாது.

—கடற்ருெழில் அமைச்சு மானியம் மீது பேசியது.

## பொறியியல், மருத்துவ பீடங்களுக்கு

# மொழியடிப்படையில் தரப்படுத்தல்!

## அரசின் திட்டம் அம்பலமாகிறது!

'இலங்கைப் பல்கலைக்கழக அனுமதி இம்முறையும் புள்ளிகள் தரப்படுத்தல் அடிப்படையிலேயே நடைபெற விருப்பதாக தெரிகிறது. கலைப் பிரிவுக்கு நடைபெறவுள்ள அனுமதி மட்டும் மாவட்ட அடிப்படையில் நிகழும்.

நான்கு பாடங்களிலும் மாணவர்கள் பெற்றுள்ள புள்ளிகளை பாடங்களின் அடிப்படையிலும் மொழியடிப்படையிலும் தரப்படுத்தும் முறைமூலமே விஞ்ஞான பொறியியல் மருத்துவ பீடங்களுக்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

வழமையான இப்போதைய தரப்படுத்தல் முறை மூலம் ஒரு துறைக்குதெரிவு செய்யப்படும் மாணவர்களின் தொகை அந்தத் துறைக்கு இருக்கும் இடங்களின் எண்ணிக்கையில் ஐந்து சதவீதத்தை தாண்டாவிட்டால், மாவட்ட அடிப்படையும் புகுத்தப்பட வேண்டும் என்று முடிவு

( 7ம் பக்கம் பார்க்க)

## சுகாதார அமைச்சின் தமிழ் ஒழிப்பு!

'இந்த அரசாங்கத்திலுள்ள சகல அமைச்சுக்களிலும் சுகாதார அமைச்சுத்தான் தமிழைப் புறக்கணிப்பதில் முதலிடம் வகிக்கிறது. இந்த அமைச்சு வெளியிடும் படிவங்கள் பல தமிழில வெளிவருவதில்லை. உதாரணமாக வடபகுதியில் கொலரா தடுப்பு ஊசி ஏற்றப்பட்டதற்கு கொடுக்கப்படும் அத்தாட்சிப் பத்திரத்தில் கூட தமிழுக்கு இடமில்லை.

—பேரவையில்

பண்டிதர் இரத்தினம்.

## அறிவித்தல்

பத்திரிகைத்தாள் விலையுயர்வு அச்சியற்றும் உபகரணங்களின் விலை உயர்வு, அச்சக ஊழியர்களின் சம்பள உயர்வு, அரசாங்கத்தின் வரி, போன்ற பல்வேறு காரணங்களினுல் சுதந்திரன் பத்திரிகையின் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளது. ஏனைய பத்திரிகைகள் விலையைக் கூட்டியபோதிலும் இதுநாள் வரை சுதந்திரன் விலையை அதிகரித்து வாசகநேயர்களுக்கு பளுவை சுமத்தாமல் சமாளிக்க முடியுமா என்று நாம் முயற்சி செய்து பார்த்தோம். ஆனுலும் விலையை அதிகரித்தே திர வேண்டிய இன்றியமையாத நிலைக்கு இப்போது தள்ளப்பட்டுள்ளோம்.

**எனவே 1974 சனவரி முதல் (6. 1. 1974) இதழிலிருந்து சுதந்திரன் தனிப் பிரதியொன்றின் விலை 35 சதமாகும் என்பதை அறியத்தருகிறேம்.**

தமிழின் விடுதலை உணர்ச்சிகொண்ட நமது வாசகர்கள் நமது நிர்ப்பந்த நிலையை உணர்ந்து—சுதந்திரனைத் தொடர்ந்து ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேம்.

— நிர்வாகி.

## தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு கோலாகலமான ஏற்பாடு!

### அரங்குக்கு 'ஈழத்துப் பூதந்தேவனுர்' பெயர்! தனிநாயக அடிகள் திறந்து வைப்பார்!

ஈழத்தமிழ் நாட்டின் தலைநகரும் தமிழ் மன்னர்கள் சங்கம் வைத்து தமிழ் வளர்த்ததுமான யாழ்ப்பாணத் திருநகரில், உலகத்தின் பல்வேறு நாடுகளிலிருந்தும், நூற்றுக்கணக்கான மொழி ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொள்ளவிருக்கும் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் சுறுசுறுப்புடன் நடைப்பெற்று வருகின்றன.

இன்னும் பத்து தினங்களில் தொடங்கவிருக்கும் இந்த மாநாட்டையொட்டி ஈழமடங்கிலுமுள்ள தமிழர்கள் புதிய உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் மாநாட்டு அமைப்பாளர்களுக்கு ஆதரவும், அனுதாபமும், காட்டுவதுடன் உதவிகளும் அளித்துவருகிருர்கள்.

குடியரசுத் தலைவர், மாநாட்டைத்தொடக்கி வைப்பதில் தமக்குள்ள வசதியீனத்தைத் தெரிவித்ததைத் தொடர்ந்து அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் நிறுவனரும் தமிழ்ப்பேரறிஞருமான வண. தனிநாயக அடிகளாரிடம் இந்தமாநாட்டைத் தொடக்கி வைக்கும்படி கோரப்பட்டுள்ளதாக தெரிகிறது.

#### சங்கப்புலவனின் பெயர்

மாநாடு நடைபெறும் அரங்குக்கு ஈழத் தமிழகத்தின் பழம் பெரும் சங்கப்புலவன் 'ஈழத்துப் பூதந்தேவனுரின்' பெயர் சூட்டப்படும் என்று தெரிகிறது. ஆராய்ச்சிக் கருத்தரங்கு யாழ் றிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாநாட்டில் விசேடவிருந்தினராக கலந்துகொள்ளுமாறுதேசிய பேரவை உறுப்பினர்கள், அமைச்சர்கள், பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், மதத் தலைவர்கள், வெளிநாடுகளிலுள்ள தமிழ் பேசும் அமைச்சர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர் என்றும், மாநாட்டு நிகழ்ச்சிகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் நடைபெறும் என்றும் இலங்கைக் கிளை இணைச்செயலாளர் டாக்டர் கோபாலபிள்ளை மகாதேவா வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

தமிழ் இலக்கியம், மொழியியல், அறிவியல், தொழில்நுட்பம், வரலாறு, தத்துவம், மதம், வைத்தியம், கட்டடத்துறை போன்ற பல்வேறு துறைகளையொட்டியும், அத்துறைகளில் ஈழத் தமிழர்களின் பங்கு பற்றியும் குறிப்பிடும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் இந்த மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளன.

#### கொடிதினம்

தமிழாராய்ச்சி மாநாட்டையொட்டி 'கொடித்தினம்' ஒன்றை சனவரி 5ந் திகதி நடத்த திரு. கே. சச்சிதானந்தன் ஏற்பாடு செய்துள்ளார். உணவு உறைவிடக்குழுத் தலைவராகவும் உள்ள அவர், வெளிநாட்டிலிருந்து வரும் அறிஞர்களை கௌரவித்து நன்கொடை

(7-ம் பக்கம் பார்க்க)

## கோலேந்திகளை எதிர்த்து குமுறியெழுந்தது மலையகம்!

### 12 இலட்சம் உழைக்கும் கரங்கள் வேலை நிறுத்தம்!

பசி, பட்டினி, உணவுப் பற்றுக்குறை, போதிய ஊதியமின்மை—இவற்றுல் பாதிக்கப்பட்டு, குமுறிக்கொண்டிருந்த மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் பொறுத்தது போதும் என்று பொங்கியெழுந்து வெற்றி அல்லது வீரமரணம் எனும் உறுதியுடன் இத்திங்கள் 18ம் நாள் முதல் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

அரசியலுரிமைகள் பறிக்கப்பட்ட நிலையிலும் இந்நாட்டுக்காக ஓடாகத் தேய்ந்து, மாடாக உழைத்து, அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற ஆறு இலட்சம் தோட்டத்தொழிலாளர்கள், அரசாங்கத்தின் வானெலிப் பிரச்சாரங்களை அலட்சியப்படுத்திவிட்டு, மாதச் சம்பளக் கோரிக்கையை அடிப்படைக்கோரிக்கையாக வைத்து இந்த வேலை நிறுத்தத்தில் இறங்கினர்.

அரசாங்கக் கட்சிகளில் ஒன்ருன பீட்டர் கெனமன் கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள கம்யூனி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

சுதந்திரன் 23—12—73

# கருணாநிதியின் ஆட்சியைக் கவிழ்க்க எதிர்க்கட்சிகள் ஏந்தியுள்ள இறுதி ஆயுதம்!

திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கும், தமக்கும் எதிராக பல்வேறு முனைகளிலிருந்தும், பற் பல வடிவங்களில், பல்வேறு சக்திகளால் முடுக்கி விடப்பட்டுள்ள போராட்டங்களையெல்லாம் தமிழக முதல்வர் கலைஞர் டாக்டர் கருணாநிதி விவேகத்துடனும் வீரத்துடனும் சந்தித்து சமாளித்து, வருகிறார். கருணாநிதியின் ஆற்றலையும், துணிச்சலையும் கண்டு அவருக்கும் அவரது அரசுக்கும் எதிராக போராட்டங்களை நடத்திவரும் எதிர்க்கட்சிகளே மூக்கின் மேல் விரலைவைக்கும் அளவுக்கு அரசியல் சாணக்கியவீரராக கருணாநிதி விளங்கிவருகிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் பிளவு ஏற்பட்டு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். தலைமையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உருவாகிய நாளிலிருந்து, கருணாநிதியும் கழக அரசும் தொடர்ச்சியான பல்வேறு நெருக்கடிகளையும் சந்திக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது; நெருப்பாறுகளைத்தாண்ட வேண்டிய சோதனைகள் பல கலைஞருக்கு ஏற்பட்டன.

## எம். ஜி. ஆர்.

மக்கள் திலகம் என்று பெயரெடுத்தவரல்லவா எம். ஜி. இராமச்சந்திரன்? மக்களிடையே அவருக்கு அபரிமித செல்வாக்கு உண்டு. இந்தச் செல்வாக்கு அவருக்கு அரசியலால் ஏற்பட்டதா அல்லது சினிமாவால் ஏற்பட்டதா என்பது விவாதத்துக்குரிய பிறிதொரு விஷயம். ஆனாலும் அவருக்கு செல்வாக்குண்டு என்பது மட்டும் உண்மை.

இந்தச் செல்வாக்குத்தான் திண்டுக்கல்லில் அண்ணா தி. மு. க. வுக்கு வெற்றியைத் தேடிக்கொடுத்தது. இதைத் தொடர்ந்து சுமார் ஆறு மாத காலம் வரை நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக போராட்ட அறிவித்தல் விட்டுக் கொண்டிருந்தார். எம். ஜி. ஆர்.

மூன்று மாதங்களில் தி. மு. க. அரசு வீழ்ந்துவிடும்—ஆறு மாதங்களில் கருணாநிதி அப்புறப்படுத்தப்படுவார் என்றெல்லாம் ஆருடம் கூறினார் எம். ஜி. ஆர். கிடு கிடு போராட்டம், பெண்கள் போராட்டம், வாக்காளர் பேரணி, ஹர்த்தால், அது இது என்று பல போராட்டங்களை தொடர்ச்சியாக நடத்தினார்.

## கம்யூனிஸ்ட் சூழ்ச்சி

இதுதான் சமயமென்று—திராவிட முன்னேற்றக் கழக அரசை வீழ்த்துவதற்காக, எம். ஜி. ஆரை அது வரை திட்டிக்கொண்டிருந்த வலது சாரி கம்யூனிஸ்டுகள் எம். ஜி. ஆரைப் புகழ்ந்து பாராட்டி, அண்ணா தி. மு. க. வின் போராட்டங்களுக்குள் தாங்களாகவே சென்று தலையைக் கொடுத்தார்கள்.

எம். ஜி. ஆர். — கம்யூனிஸ்டு கட்சி உறவினால் இந்தியக் கம்யூனிஸ்டுக்கட்சியின் தமிழ் நாடு மாநிலப் பிரிவில் பிளவு ஏற்பட்டது. மணலி கந்தசாமியின் தலைமையில் புதியதொரு கம்யூனிஸ்ட் கட்சி—தமிழ் நாடு கம்யூனிஸ்ட் கட்சி தோன்றியது.

## ஒரு வெற்றி

கம்யூனிஸ்ட் கட்சியின் துடிப்புள்ள இளம் தலைவர்களில் ஒருவரான திரு. சுப்பு அக் கட்சியிலிருந்து வெளியேறி திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து கொண்டார் இது கருணாநிதியின் இராசதந்திரத்துக்கு கிடைத்தஒருவெற்றியாகும்.

## மாணவர் கிளர்ச்சியைச் சமாளிக்க கலைஞர் என்ன செய்யப் போகிறார்?

## மாநகராட்சி நிதி மோசடி மீது கருணாநிதியின் உறுதியான நடவடிக்கை!

மக்கள் திலகம் எம். ஜி. ஆர்., மக்களிடையே எவ்வளவுதான் செல்வாக்குள்ளவராக விளங்கிய போதிலும் — அவர் நடத்திய போராட்டங்களினால், அவர் குறிப்பிட்டது போல் மூன்று மாதத்துக்கிடையில் மட்டுமல்ல — அண்ணா தி. மு. க. தொடங்கி, ஓராண்டுக்கு மேலாகியும் கூட கருணாநிதியையோ தி. மு. கழக அரசையோ இதுவரை கவிழ்க்க முடியவில்லையென்ற உண்மையை நாம் காணுகின்றோம்.

இது பற்றி கலைஞர் கருணாநிதி அண்மையில் ஒரு கூட்டத்தில் பேசும் போது — இன்று ரொக்கம், நாளை கடன் என்று சில வர்த்தகர்கள் கடைகளில் எழுதி தொங்கவிட்டிருப்பதைப் போன்று — மூன்று மாதங்களில் அரசு கவிழும் என்று 30 மாதமாக கூறிவருவோர் இருக்கிறார்கள் என்று வேடிக்கையாக குறிப்பிட்டார்.

அந்த அளவுக்கு தி. மு. க. ஆட்சி, ஈடாட்டமில்லாது உறுதியுடன் இன்று இருந்து வருகிறதென்றால், அதற்கு மூலகாரணம் கலைஞர் கருணாநிதிதான். அதனால் தான், கழக அரசைக் கவிழ்க்க வேண்டுமானால், கருணாநிதியை ஒழித்தால் மட்டுமே அது முடியுமென்பதை உணர்ந்த தமிழக எதிர்க்கட்சிகள், இன்று, கலைஞரைப் பதவி துறக்கக்கோரி கிளர்ச்சிகள் நடத்திவருகின்றன.

தி. மு. கழக அரசு மீது இலஞ்ச ஊழல் குற்றம் சுமத்தி ஒன்றுக்கு இரண்டு ஊழல் குற்றச் சாட்டுப் பட்டியலை, மக்கள் திலகம் எம். ஜி. ஆரும், கம்யூனிஸ்ட் தலைவர் கல்யாண சுந்தரமும் டெல்லியில் கொண்டுபோய் கொடுத்து விசாரணைக் குழு நியமிக்கும்படி கோரியிருந்தது தெரிந்ததே.

இதற்கு டெல்லியின் பதில் என்ன வென்பது இன்னும் மர்மமாகவே இருந்து வருகிறது. ஒரு மாநில அரசுமீது நடவடிக்கை யெடுப்பதற்கு விசாரணை நடத்துவதற்கு மத்திய அரசுக்கு உரிமை கிடையாது என்று தமிழ் நாடு அரசு கூறிவருகிறது.

எம். ஜி. ஆரும், கல்யாண சுந்தரமும் அளித்த இரண்டு குற்றச்சாட்டுப் பட்டியலுக்கும் உரிய பதிலை தமிழ் நாடு சட்டசபையில் வைத்ததுடன், அதைப்பொது மக்கள் படிப்பதற்காக நூலாக அச்சிட்டும் வெளியிட்டுள்ளார் கருணாநிதி.

## நடவடிக்கை

ஊழல்இலஞ்சம் என்றுகுற்றம் சாட்டப்படத்தொடங்கிய நாள் முதல் கருணாநிதி ஒன்றைத் திரும்பத் திரும்ப கூறிவந்தார் — அதாவது ஆதாரத்துடன் குறிப்பிட்டுக் குற்றம் சாட்டினால்தான் நடவடிக்கையெடுப்பதாக. குற்றம் செய்தார் என்று நிரூபிக்கப்பட்டால், அது யாராக இருந்தாலும், தன் மகனாக இருந்தாலும் நடவடிக்கையெடுப்பேன் என்று அவர் திரும்பத் திரும்பக் கூறிவந்தார்.

குற்றவாளியே எப்படி நீதிபதியாக முடியும் என்று எம். ஜி. ஆர் இதற்குப் பதிலளித்து வந்தார்.

ஆனாலும்—ஆதாரத்துடன் குற்றம் சாட்டப்பட்டால் நடவடிக்கையெடுக்கப் பின்னிற்க மாட்டேன் என்று தாம் அளித்த உறுதிமொழியை இப்போது செயலில் காட்டிவிட்டார் கருணாநிதி—சென்னை மாநகராட்சியில் எழுந்த பிரச்சினையின் போது!

சென்னை மாநகராட்சி, திராவிட முன்னேற்றக்கழகத்தின் ஆதிக்கத்திலுள்ளது என்பது அனைவரும் அறிந்ததே. அந்த மாநகராட்சியில் கோடிக்கணக்கான ரூபா பண மோசடி ஒன்று நடைபெற்றிருப்பதைஎதிர்க் கட்சிப் பத்திரிகைகள்-குறிப்பாக அலை ஓசை—அம்பலப் படுத்தியது. அதை விசாரித்த கருணாநிதி அதில் உண்மை இருப்பதைக் கண்டு திடுக்கிட்டார்.

## ஊழல் ஒழிப்பு

தன்னுடைய கட்சியினரின் ஆதிக்கத்திலிருந்த போதிலும் மாநகர நிர்வாகத்தில், ஊழல், பணமோசடி நடைபெற்றிருப்பது உண்மையெனக் கண்டதும் உடனடியாக அச்சபையைக் கலைத்துடன், குற்றவாளிகளை கைது செய்து கூண்டிலேற்ற உத்தரவிட்டார் கருணாநிதி.

தி. மு. க. வினர், அண்ணா தி. மு. க. வினர், பழைய காங்கிரஸ், புதிய காங்கிரஸ் உட்பட பல கட்சிகளைச் சேர்ந்த மாநகர சபை உறுப்பினர்களும் பண மோசடி சம்பந்தமாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பாராட்டு

தி. மு. க. வின் முக்கிய மேயர்களாக விளங்கிய வி. முனுசாமி, மைனர் மோசெஸ் போன்றவர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்த அளவுக்கு நீதியை நிலைநாட்ட தயவுதாட்சண்யமின்றி கட்சிப்பற்றுக் கடந்த நிலையில் நின்று கருணாநிதி எடுத்த உறுதியான நடவடிக்கைகளை ஆனந்தவிகடன் போன்ற நடுநிலை ஏடுகளே பாராட்டியுள்ளன. தொட்டதற்கெல்லாம் சண்டைபோடும் குணமுள்ள அண்ணா தி. மு. க. எம். எல். ஏ. ஆன ஹாண்டே அவர்களும், இதற்காக கருணாநிதியைக் கட்டித் தழுவி பாராட்டியுள்ளார்.

ஊழல், இலஞ்சம், என்று கழக அரசு மீது குற்றம் சாட்டியோருக்கு ஊழல், இலஞ்சத்தை ஒழிக்க கருணாநிதி எடுத்த இந்த உறுதியான நடவடிக்கை சரியான பதில் என்று அரசியல் நோக்கர்கள் கூறுகிறார்கள்.

## பிசுபிசுப்பு

மாநில சுயாட்சி என்ற போர்வையில் கருணாநிதி பிரிவினை கேட்கிறார் என்று குற்றம் சுமத்தி—அதைப் பெரிதாக பிரச்சாரம் செய்து—மத்திய அரசைக் கொண்டு தமிழக அரசைக் கவிழ்க்கச்செய்வதற்கு எதிர்க்கட்சிகள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் கருணாநிதியின் பிரச்சார பலத்தின் முன்னால் பிசுபிசுத்து விட்டன. திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாகப் பிரிவினைகோரவில்லையென்பதை இந்திராகாந்தியவர்களே திட்டவட்டமாக கூறிவிட்டார்.

## ராயப்பா வழக்கு தள்ளுபடி

கருணாநிதி அரசுக்கு எதிராக ஊழல், அதிகார துஷ்பிரயோகம் ஆகிய குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி, இந்திய உயர் நீதிமன்றத்தில் முன்னாள் தமிழக அரசு தலைமைச் செயலாளரான திரு. இராயப்பா தொடர்ந்திருந்த வழக்கை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து அண்மையில் தீர்ப்பளித்ததும் கருணாநிதிக்கு கிடைத்த ஒரு தார்மீக வெற்றியென்றே கொள்ள வேண்டும். இந்த வழக்கில், ராயப்பாவுக்குப் பின்னால் பெரும்பெரும் பணத்திமிங்கிலங்களும், எதிர்க்கட்சிகளும், பிரபல பத்திரிகைகளும் நின்றது குறிப்பிடத்தக்கது.

## இறுதி ஆயுதம்

இறுதியாக கருணாநிதி அரசுக்கு எதிராக, தமிழ் நாட்டிலுள்ள எதிர்க்கட்சிகள் அனைத்தும் இப்போது எய்திருக்கிற அம்பு மாணவர் போராட்டமாகும்.

திருச்சி கிளைவ் விடுதியிலும் பாளையங்கோட்டையிலும் கடந்த ஆண்டு மாணவர் நடத்தியபோராட்டத்தின் விளைவாக ஒரு மாணவர் கொல்லப்பட்டது சம்பந்தமாக விசாரணைசெய்ய தமிழக முதல்வர் ஒரு தனி நபர் விசாரணைக் குழுவை நியமித்திருந்தார்.

இந்தக் குழு விசாரணை முடிவில் அளித்ததீர்ப்பின்படி அந்தச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் மீது கருணாநிதி உடனடியாக நடவடிக்கையெடுத்திருக்கிறார்.

எனினும் மாணவர்கள்—இத்துடன் திருப்தியடையவில்லை. பொலிஸ் துறைக்கு பொறுப்பாக இருந்ததன் காரணமாக கருணாநிதி பதவி விலகவேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்து கிளர்ச்சி செய்துவருகின்றனர்.

அண்மையில் கருணாநிதியை பதவி விலகும்படி கோரி சட்டசபையில் துண்டுப் பிரசுரம் வீசி கைது செய்யப்பட்ட 7 மாணவர்களை — கருணாநிதியின் விருப்பத்தின் பேரில் தமிழ்நாடு சபாநாயகர் மன்னித்து விடுதலைசெய்தார்!

## எதிர்க் கட்சிகள் பின்னணியில்!

என்னதான் சொன்னாலும்—தமிழ் நாட்டில் கருணாநிதியைப் பதவி விலகும்படி கோரி மாணவர்கள் நடத்

(7-ம் பக்கம் பார்க்க)



## சீரழியும் சிங்களமே!

—பெத்தானூர் கவிஞர் மலர்வண்ணன்

அரசாளும் எண்ணத்தில் ஆசைவைத்து
அரிய பல கொடுமைகளை அன்றும் இன்றும்
சிரமேற்றுக் காக்கின்ற சிங்களப் பேயே
சிறிதளவும் அறியாமலிச் செயலைச் செய்தாய்
தரங்கெட்ட வஞ்சகத்தால் தூண்டப்பெற்று
தகப்பனையும் கொன்று முடியரசு ஏற்ற
வரலாற்றைப் படைக்கின்ற உன்னிடத்தில்
வாஞ்சையினைக் காண்பதுவும் புதுமைதானே!

கண்மூடிச் செயலாலுன் கருத்திழந்து
கனித்தமிழன் உரிமை தனைக் கவர்ந்துவிட்டாய்
மண்ணிடையே ஒற்றுமைக்கு வழியைத்தேடும்
மத்தியிலே பிரிவினையை புகுத்திவிட்டாய்!
வண்டமிழர் வாழ்வுதனை அழித்துவிட்டு
வஞ்சத்தின் புத்தரசை அமைத்துவிட்டாய்
பண்பில்லாச் சிங்களமே! பகைக்கவேண்டாம்
பழங்கதையை மீண்டுமிங்கே புகுத்தவேண்டாம்

அந்நாளில் அடிமைதனை அமைத்துவிட்ட
அரசு பட்டபாட்டினை நீ அறியவேண்டும்!
இந்நாளில் நீயமைத்த அடிமைச்சட்டம்
இழிவுடைத்து என்பதை நீ உணரவேண்டும்
எந்தமிழர் எந்நாளும் பகைக்குமுன்னே
இழிவடையார் மாத்தமிழர்; எதிர்க்கவேண்டாம்
செந்தமிழன் உரிமைக்குத் தடையே என்றால்
சீரழியும் சிங்களமே! சிதைந்து போவாய்!

(பேரறிஞர் அண்ணா அவர்களை நிறுவனராகக் கொண்டு காஞ்சிபுரத்திலிருந்து வெளிவரும் 'காஞ்சி' ஏட்டின் [illegible] வெளிவந்த கவிதை இது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்பு நண்பா,**

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு எதிர்வரும் சனவரித் திங்கள் துவக்கத்தில் யாழ் நகரில் நடைபெறவுள்ளதே — இது பற்றி நீ எதுவும் எழுதிடவில்லையே என்று கேட்டு பல நண்பர்கள் எனக்கு எழுதிவந்த போதிலும் — நான் அது சம்பந்தமாக எதுவுமே எழுதிடாமல், இதுவரை மௌனம் சாதித்து வந்தேன். காரணம்—தமிழன் என்று எனக்கிருக்கிற இயல்பான ஆர்வத்துடன், இந்த மொழி ஆராய்ச்சி மாநாடு பற்றி நான் போற்றி எழுதப்போக — மாநாட்டை நடைபெருமல் எப்படியாவது குழப்பியடித்திட வேண்டுமென்று திட்டமிட்டுச் சதிபுரிந்துவரும் சில நச்சுக் கிருமிகள், சுதந்திரனும் நானும் இந்த மாநாட்டில் காட்டுகிற ஆர்வத்தையே காரணமாகக் காட்டி, அதற்கு அரசியல் வண்ணம் பூசிடும் முயற்சியை மேற்கொள்ளக்கூடும் என்று எனக்குள் எழுந்த அச்சம்தான்!

ஆனல், நாம் எவ்வளவுதான் நமது ஆர்வத்தையும், அக்கறையையும் அடக்கிக்கொண்டு — மாநாட்டுக்கு அரசியல் வண்ணம் பூசி, தமிழ்ப் பகைவர்கள் அதைக் குழப்பியடித்து விடக்கூடாதே என்று மெத்தக்கவனமுடன் இருந்துவந்தும் — அவர்கள் தங்கள் கோணல் புத்தியையும், குறுகிய சிந்தனையையும் இதிலுங் காட்டிடத்தொடங்கி விட்டார்கள்! வெளிநாட்டார் ஈழத் தமிழினத்தை பார்த்து பரிகசிக்கும் ஒரு நிலையை தமிழ்ப் பகைவர்கள் இன்றைக்கு ஏற்படுத்தி கொண்டிருக்கிருர்கள்.

தமிழர்களின் உயிராய், உணர்வாய், ஊனய், உயர் வாழ்வின் ஒளிவிளக்காய், உன்னத பெருமையின் சின்னமாய் உயிருக்குயிராய் விளங்கிடும் தமிழ் மொழியின் சீரையும் சிறப்பையும் பாருக்கு எடுத்துக் கூறுகின்ற ஒரு முயற்சியை — அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை — இங்கு நடைபெற விடாமல் குழப்பிட, குந்தகம் விளைத்திட—எவர் முயற்சிக்கிருர்களோ அவர்கள் நிச்சயம் தமிழின் பகைவர்கள் என்றே நான் கூறுவேன்!

நண்பா—நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு அரசியல் வண்ணம் பூசி, அதற்கு ஊறுதேடுகின்ற முயற்சியில் இன்றைக்கு, ஆளவந்தாரும், அவர்க்கு மண்டியிட்டு தொண்டு செய்திடும் சில மானங்கெட்ட தமிழ் பிறவிகளும் ஈடுபட்டிருப்பதனைக் காணுகின்ற போது — இந்தத் தமிழ் பகைவர்களின் சூழ்ச்சிகளை உடைத்தெறிவதைத்தவிர நமக்கு வேறு வழியில்லை! இவர்களின் சுயரூபத்தை இந்நாட்டுத் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல — வெளிநாட்டு தமிழ் அறிஞர்களுக்கும் தோலுரித்துக் காட்டிடுவது நமது கடமையன்ருே!

ஈழத்தில், தமிழின் பெயரால் அனைத்துலகம் தழுவிய ஒரு மாநாட்டை நடத்துவதற்கு எத்தனை எதிர்ப்பு — எத்தனை இடர்பாடுகள்! சிங்கள ஆட்சியாளர் இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதைக்கூட நம்மால் புரிந்துகொள்ள முடியும்—தமிழ் வாழ்வதை வளர்வதை — உயர்வதை — உரிமை பெறுவதை — சகித்திட முடியாதவர்களாயிற்றே அவர்கள்! 'தமிழ்' என்று கூறுவதே அவர்களது அகராதியில் 'வகுப்புவாதம், இனவெறி' ஆயிற்றே!

ஆனல், தமிழாராய்ச்சி மாநாட்டை எப்படியும் குழப்பிவிட வேண்டுமென்று சதித்திட்டம் தீட்டி — அதற்கு ஏற்றவகையில் அரசுக்கு திட்டமிட்டு ஆலோசனை வழங்கி வருபவர்கள் தமிழர்களாகப் பிறந்த சில துரோகிகளே என்பதை அறிந்திடும் போது — தமிழ்த் தாய் இரத்தக் கண்ணீர் வடித்திடுவதைத் தவிர வேறு என்ன செய்திட இயலும்?

நண்பா, குணசேன நிறுவனத்திலிருந்து வெளிவருகின்ற பத்திரிகைகள் விற்பனைக்காகவோ வேறு என்ன காரணத்துக்காகவோ அரசுக்கு விரோதமான செய்திகளை வெளியிட்டு வந்த போதிலும் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு அரசியல் வண்ணம் பூசி — இந்த மாநாட்டை தமிழரசுக் கட்சியினர் அல்லது தமிழர் கூட்டணியினரே பின்னின்று இயக்குவதாக ஒரு கற்பனைக் கதையை கருவாக்கி, உருவாக்கி வெளியிட்டு, இந்தப் பிரச்சினையில் ஆட்சியாளருக்கும், அவர்களது தமிழ் அடிவருடிகளுக்கும் அரி ஓம் நம என்று அடியெடுத்து கொடுத்து துரோகம் புரிந்த பெருமை வழமை போலவே 'தினபதி' ஏட்டைத்தான் சாரும்!

ஆம் நண்பா, 'தினபதி'யின் திருவிளையாடலைத் தொடர்ந்துதான் அரசாங்க ஊதுகுழலான தினகரனும், ஆளுங்கட்சியின் தமிழ் அடிமைகளும் ''அரசியல் மாநாடு'' என்றும் ''பிரிவினை'' மாநாடு என்றும், தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு பெயர் சூட்டிட முனைந்தனர் என்பது செய்தி ஏடுகளைத் தொடர்ந்து வாசித்து வந்தவர்களுக்கு புரிந்திருக்கும்!

'பிரிவினை மாநாடு' நடத்திடவேண்டுமானல், அத்தகைய ஓர் மாநாட்டை எப்பொழுது எந்த சந்தர்ப்பத்தில் எப்படி நடத்திடவேண்டும் என்பது தமிழர் கூட்டணிக்குத் தெரியும்! அப்படியொரு 'பிரிவினை மாநாடு' நடத்திடும் நேரம் வரும்போது — ஒரு காலத்தில் திட்டவட்டமாகப் பிரிவினை கேட்ட — பிரிவினை மாத்திரமல்ல அப்படிப் பிரிகின்ற ஈழத்தமிழ் நாடு. இந்தியாவின் அங்கமாக இணைந்திடவேண்டும் என்று தெட்டத்தெளிவாகக் கூறிய வட்டுக்கோட்டை பா. உ. வும் நிச்சயமாக அந்த மாநாட்டுக்கு அழைக்கப்படுவார்;

ஆனல் அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டை, அரசியல் கலப்பற்ற மொழி ஆய்வுக் கருத்தரங்கை — அரசியலுக்காகப் பயன் படுத்திடவேண்டிய நிலையில் தமிழர் கூட்டணி இல்லை — அப்படி செய்யக்கூடிய சின்னத்தனம் நிறைந்தவர்களின் கூடாரமல்ல தமிழர் கூட்டணி!

தமிழர் கூட்டணி உறுப்பினர்கள் சிலர் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையில் இருப்பது உண்மை; அதே போல ஆளும் சிறீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் சிலரும் இருக்கிருர்கள்; கட்சி சார்பற்ற அறிஞர்கள் இருக்கிருர்கள்; நடுநிலைவாதிகள் இருக்கிருர்கள்; அரசியலுடன் தொடர்பற்ற சமூக சேவையாளர்கள் இருக்கிருர்கள். இப்படி பல்வேறு கருத்துக்களையும் கொண்டவர்கள் — அரசியல் அடிப்படை கிஞ்சிற்றுமின்றி — தமிழாய்வுக் கருத்தரங்கை நடத்திட முயலும் போது — அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள்— மீண்டும் கூறுவேன்—நிச்சயம் தமிழின் எதிரிகளே!

# ஈழத் தமிழனுக்கு ஒரு சவால்!

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு, அரசியல் கலப்பின்றி நடைபெறவேண்டும் என்று மனமாரவிரும்பி — நாமாகவே ஒதுங்கியிருந்தாலும்கூட — இன்றைக்கு அரசாங்கமே அதை 'அரசியல் பிரச்சினை' ஆக்கிவிட்டிருக்கிறது!! ஆம் நண்பா, மாநாடு நடைபெற வேண்டிய இடம் முதல் மாநாட்டுக்கு வருகை தரவிருக்கும் அறிஞர்களுக்கு விசாவழங்குவது வரை இன்றைக்கு, 'அரசியல்' பிரச்சினையாக ஆக்கிவிட்டிருக்கிறது அரசாங்கம்!

கொழும்பில் மாநாடு நடைபெற்ருல் மட்டுமே அரசாங்கம் மாநாட்டுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்குமென்றும் மாநாட்டுக்கு வருவோருக்கு தங்கு தடையின்றி விசாவழங்குமென்றும், யாழ்ப்பாணத்தில் நடத்தினல், அரசின் ஒத்துழைப்பு கிடைக்காதென்றும் பத்திரிகையாளர் மாநாட்டில் பிரதிபாதுகாப்பு அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடி கூறியிருக்கிருர்!

நண்பா, ஆராய்ச்சி நடைபெறப்போவது தமிழ் மொழியைப் பற்றி! அதை நடத்த விருப்பவர்கள் தமிழறிஞர்கள் — எனவே மாநாடு நடைபெறவேண்டிய இடம் எது என்பதை முடிவு செய்ய வேண்டியவர்கள் மாநாட்டுக்குழுவிலுள்ள தமிழர்கள்! அவர்கள் தீர்க்கமாக ஆராய்ந்து முடிவு செய்துதான் தமிழர் நாடாகவிளங்கும் யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்திடுவது என்று முடிவு செய்திருக்கிருர்கள்!

இதில் கூட அரசு தலையிட்டு—மாநாட்டை கொழும்பில் தான் நடத்தவேண்டும்; யாழ்ப்பாணத்தில் நடத்தினல் ஆதரவு தர மாட்டோம் என்று கூறிடுவது—ஈழத்தமிழர்கள் தாம்விரும்பிய இடத்தில்—அதுவும் தமது சொந்தப் பிரதேசத்தில் மொழி சம்பந்தப்பட்ட ஒரு மாநாட்டை நடத்தும் ஒரு சாதாரணவிஷயத்துக்குக்கூட அரசுமுட்டுக்கட்டை போடுவதை வெளிநாட்டார் அறிந்திடவே வாய்ப்பு ஏற்படுத்தித் தருகிறது!

ஈழத்தில் தமிழர்களுக்கு எல்லா உரிமைகளையும் அளித்திருப்பதாக டமார மடித்து வரும் சிங்கள அரசு, மொழி ஆராய்ச்சி சம்பந்தபட்ட அனைத்துலக மாநாட்டை கூட இலங்கைத் தமிழர்கள் தங்களுக்கு விருப்பமான இடத்தில், விருப்பமான முறையில் நடத்துவதற்கு ஒத்துழைப்பு நல்க மறுத்துவிட்டதே; இதன் பொருள், இந்தச் 'சின்ன' உரிமை கூட ஈழத்தமிழனுக்கு இல்லை என்பதுதான்; இந்த நிலையில் ஈழத்தமிழர்கள், தங்கள் பிரதேசத்துக்கு தன்னுட்சி கோருவது நியாயம்தானே என்று வெளிநாட்டார் நிச்சயம் சிந்திக்கவே போகிருர்கள்!

**யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு அரசாங்கம் ஒத்துழைப்பு அளிக்குமானல்—அது தமிழ் மொழிக்கு இலாபம்; ஒத்துழைப்பு அளிக்க மறுக்குமானல், அது அரசியல் ரீதியாக தமிழர் கூட்டணிக்கும் தமிழர் சுயாட்சிக் கோரிக்கைக்கும் இலாபமாகவே முடியும்!**

இந்நாட்டுக்கு வருகின்ற வெளிநாட்டுப் பிரமுகர்களையும், அரசியல் தலைவர்களையும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அழைத்து [illegible] இரும்புத் திரை போட்டு மறைத்துவரும் சிங்கள அரசு —தமிழாராய்ச்சிக்கு வருகின்ற வெளிநாட்டு தமிழ் அறிஞர்கள் தமிழ்ப்பகுதிக்கு சென்று தமிழாய்வு நடத்துவதற்குக்கூட முட்டுக்கட்டை போட முயற்சிக்கிறது!

நண்பா, அனைத்துலக மாநாடு ஏன் பிரதேசத்தலைநகரில் நடைபெறவேண்டும் என்று கேட்டிடும் லக்ஸ்மன் ஜெயக்கொடியை நாம் கேட்போம்— அனைத்துலகம் சம்பந்தப்பட்ட மாநாடு கூடவேண்டாம் — அனைத்திலங்கை சம்பந்தப்பட்ட விழாவான முதல் குடியரசு விழாவை தலைநகரான கொழும்பிலே கொண்டாடுவதற்குப் பதில், கண்டியிலே ஏன் கொண்டாடினீர்கள்? சிங்கள பௌத்தர்களின் முக்கிய வரலாற்றுப் பெருமை மிக்க இடம் கண்டி என்பதனலன்ருே?

அதே போலவே ஈழத்தமிழர்களின் பழம் பெரும் வரலாற்றுப் பெருமை மிக்க யாழ்ப்பாணத்தில், தமிழ் மொழி சம்பந்தப்பட்ட மாநாடுநடைபெறுவதில் என்ன தவறு கண்டீர்கள்? சிங்கள மக்களுக்கு இருக்கின்ற மொழி, இன, வரலாற்று அபிமானம் தமிழர்களுக்கும் இருக்கும் என்பதை உங்களால் ஏன் புரிந்துகொள்ள முடியவில்லை?

நண்பா, லக்ஸ்மன் ஜெயக்கொடியிலும் பார்க்க ஒருபடி மேலே பாய்ந்து — தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வருவோருக்கு விசா வழங்கவேண்டாமென்றும், தேவையானல் மாநாட்டை தடைசெய்யும் படியும் அரசாங்கத்தை ஒருவர் கோரியிருக்கிருர் — சிங்களவரல்ல—ஒரு தமிழர்! — திருவாளர் அருளம்பலம்!!

அருளம்பலத்தின் அறிக்கையைக் கண்டதும் உணர்ச்சிமிக்க ஏனைய தமிழர்களைப் போலவே எனக்கும் கோபமும் கொதிப்பும் ஏற்பட்டதெனினும்—சிறிது சிந்தித்த பின்னர் அடக்கிக்கொண்டேன்!

அருளம்பலம் போன்ற தமிழ்ப் பகைவர்கள்—எட்டப்பர்கள்—இப்படி படுதுரோகத்தனமான அறிக்கைகளை அடிக்கடி விட்டுக்கொண்டிருப்பதனல்தான், தமிழர் சமுதாயம் இன்றைக்கும் வீர உணர்ச்சியுடன், மான உணர்ச்சியுடன் குமுறி எழுந்துகொண்டிருக்கிறது; தமிழ் இளைஞர்களது உணர்ச்சி சிறிது குன்றுகிற நேரங்களில் எல்லாம் அருளம்பலம் போன்ற தமிழ்ப்பகைவர்களின் துரோகத்தனமான அறிக்கைகளும், பேச்சுக்களும்தான் புதிய உணர்ச்சியையும் வேகத்தையும், வீரத்தையும் மான உணர்வையும் தமிழினத்துக்கு ஏற்படுத்தி வந்திருக்கிறது!

இன்றைக்கும் அருளம்பலம் மாநாட்டைத் தடைசெய்யும்படி கோரிய பின்னர் தான், மாநாட்டை எப்படியும் சிறப்பாக நடத்திட வேண்டுமென்ற வைராக்கியம் தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது!

யாழ்ப்பாணத்தில் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறுமானல் அதற்கு அரசு ஆதரவு அறவே கிடையாது என்ற லக்ஸ்மன் ஜெயக்கொடியின் அறிவிப்பு — இந்நாட்டுத்

## அரசியல்மேடை

தமிழ் மக்களுக்கு — தமிழ் மக்கள் தங்கள் மொழியின் மீது கொண்டிருக்கும் ஆழமான பற்றுக்கு, பாசத்துக்கு—விடப்பட்டுள்ள ஒரு சவாலாகும். ஆட்சியாளரின் சவாலை ஏற்று, அரசின் ஆதரவு இன்றியே மாநாட்டை சிறப்புற நடாத்தி முடிப்பது தமிழர்களின் இன்றியமையாக் கடமை!!

பாரிசில் நடைபெற்ற 3வது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு, அரசாங்க உதவியும் அமைச்சர்கள் பங்கும் இல்லாமலேயே சிறப்பான கருத்தரங்காக நடந்ததுபோல யாழ்ப்பாணத்திருநகரில் நடைபெறும் 4வது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடும், அரசின் ஆதரவும், ஒத்துழைப்புமின்றியே சிறந்து விளங்கிடத்தக்க வகையில், தமிழர்கள் ஓரணியில் நின்று ஒத்துழைப்பு நல்கிட வேண்டும்!

அரசு ஆதரவின்றி, ஒரு மாநாட்டையே நடத்த தமிழர்களால்முடியாது போகுமானல் அரசை எதிர்த்து நின்று எதிர் காலத்தில் ஒரு சொந்த நாட்டை எப்படி இவர்கள் உருவாக்கிடப் போகிருர்கள் என்று வெளிநாட்டார் கேட்டிடும் நிலைமை தோன்றவிடாமல், தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு சீரும் சிறப்பும் வெற்றியும் சேர்ப்போம்!

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## 'சிறிமாவோ' நாயகம்!

சனநாயகத்தின் அடிப்படை Rule of Law—அதாவது சட்டத்தின் ஆட்சியென்று கூறுவார்கள் அரசியல் சான்றோர்!

பிரச்சினைகள் தோன்றும்போது மக்களும் மக்களும் மோதிக்கொண்டிருந்த காலம் காட்டுமிராண்டிக்காலம். அந்தக் காலம் இலங்கையில் இப்போது மீண்டுகொண்டிருக்கிறதோ என்றே எண்ணத் தோன்றுகிறது நமக்கு!

சனநாயக அமைப்பின்கீழ், நாட்டை ஆள்வதற்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைக்கொண்ட தேசிய பேரவை இருக்கிறது; அச்சபை தேவையான சட்டங்களை இயற்றுகிறது — அச்சட்டங்களை நடைமுறைப்படுத்த அதிகாரிகள் இருக்கிறார்கள். சட்டத்தை மீறுவோரைக் கைதுசெய்ய பொலீஸ் இருக்கிறது; தண்டிக்க நீதிமன்றம் இருக்கிறது!

ஒரு கருத்துள்ள மக்களும் அதற்கு நேர்முரணான வேறு கருத்துக்கொண்ட மக்களும், ஒருவரோடொருவர் நேரடியாக மோதிப் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியுமென்றால் இந்நாட்டில், பொலீசும், நீதிமன்றங்களும் இருக்கவேண்டிய அவசியமென்ன?

ஒரு சனநாயக நாட்டில், அரசாங்கத்துக்கு எதிராக அமைதியானமுறையில் கிளர்ச்சி நடத்த அரசியல் கட்சிகளுக்கும் பொதுமக்களுக்கும் பூரண உரிமை இருக்கவே இருக்கிறது.

இலங்கையும் ஒரு சனநாயக நாடு என்று சொல்லப்படுவதால், அரசின் உணவுக் கொள்கைக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அமைதியான சத்தியாக்கிரகத்தை நடத்தி வருகின்றன.

இந்தச் சத்தியாக்கிரகத்தினால், அமைதி குலையுமென்று கண்டால்—சட்டம் மீறப்படுகிறது என்று கண்டால்—சத்தியாக்கிரகிகளைக் கைதுசெய்திடவோ, சத்தியாக்கிரக இயக்கத்தை தடைசெய்திடவோ அரசுக்கு உரிமையுண்டு; அதிகாரமுண்டு.

ஆனால், அண்மையில் அத்தனகலை சத்தியாக்கிரகத்தின் போது நடந்த சம்பவங்களும், அதற்கு ஆதரவாக தேசிய பேரவையில் நாட்டின் முதலமைச்சர் கூறிய கருத்துக்களும், சனநாயகத்துக்கு அளிக்கப்பட்ட விளக்கமும் — பல கேள்விகளை எழுப்புகின்றன:

சத்தியாக்கிரகம் செய்வதற்கு எதிர்க்கட்சிகளுக்கு சனநாயகத்தின் பெயரால் எவ்வளவு உரிமையுண்டோ அதே அளவு உரிமை சனநாயகத்தின் பெயரால், அச்சத்தியாக்கிரகத்திற்கு எதிராக வீதிகளைத் தடைசெய்வதற்கு அத்தனகலைத் தொகுதி மக்களுக்கு உரிமை உண்டு என்றும் அத்தனகலைத் தொகுதிக்குள் வெளியார் தலையிடுவதை எதிர்ப்பதற்கு அத்தொகுதி மக்களுக்கு உரிமையுண்டென்றும் முதலமைச்சர் கூறியிருக்கிறார்.

சனநாயகத்திற்கு அம்மையார் தந்துள்ள புதிய வரைவிலக்கணம் இதுவாகும்!

முதலமைச்சரிடம் நாம் கேட்கிறோம் —

ஒரு அரசியல் கட்சி இயக்கம் ஒன்றை நடத்தும்போது—அந்த இயக்கத்துக்கு எதிராக இன்னொரு கட்சியை சேர்ந்தவர்களே மோதுவதாக இருந்தால் — அரசிடம் பொலிசும், மற்றும் படைகளும் எதற்காக இருக்க வேண்டும்?

இந்த அராஜகத்தை அனுமதிப்பது மட்டுமல்ல—இதையும் சனநாயகம் என்று வியாக்கியானம் செய்வதானால், சனநாயகதத்துவத்தைக் கண்டு பிடித்த அரசியல் வித்தகர்கள் இரத்தக்கண்ணீர் வடிப்பார்களே!

இரண்டு அரசியல் இயக்கங்கள் தமக்குள் நேரடியாக மோதிக்கொள்வதானால்; — அப்படி மோதிக் கொள்வதை ஆதரிப்பதானால்—இந்நாட்டில் சட்டம் எங்கே? பொலிஸ் எங்கே? சட்டத்தின் ஆட்சியெங்கே? அராஜகமும், காடைத்தனமுமன்றோ எஞ்சும்!

அத்தனகலைத் தொகுதிக்குள் 'வெளியார்' பிரவேசிப்பதை எதிர்த்து தெருக்களை தடைசெய்ய அத்தனகலைத் தொகுதி மக்களுக்கு உரிமையுண்டென்றால்—அதே உரிமை ஏனைய தொகுதி மக்களுக்கும் உண்டல்லவா?

'அந்த உரிமையை தமிழ்த்தொகுதிகளிலுள்ள தமிழ் மக்கள் அனைவரும் பிரயோகித்து — எங்கள் தமிழ்ப் பகுதிக்குள் 'வெளியார்' ஆன அமைச்சர்கள் எவரும் நுழையக்கூடாது என்று எதிர்த்து, வீதிகளுக்கு குறுக்கே மரக்குத்திகளை போட்டு, தடைசெய்ய நாளை ஆரம்பித்தால், அதையும் நீங்கள் அங்கீகரிக்கத்தானே வேண்டும்? அல்லது அத்தனகலை என்றால் அங்கு சனநாயகத்துக்கு ஒரு வியாக்கியானம்; யாழ்ப்பாணம் என்றால் அதற்கு பிறிதொரு வியாக்கியானம் கூறுவீர்களா?

'வெளியார்' (அதுவும் சிங்களவர்கள்) அத்தனகலைக்குள் தற்காலிகமாக பிரவேசிப்பதையே எதிர்ப்பதற்கு அத்தனகலைத் தொகுதி மக்களுக்கு உரிமையுண்டு என்றால்—மொழியால், இனத்தால் கலாசாரத்தினால், மதத்தால் முற்றிலும் வேறுபட்ட இனத்தினரான சிங்கள மக்களை, தமிழ் பகுதிகளில் திட்டமிட்டுக் குடியேற்றி தங்கள் பாரம்பரிய பிரதேசத்தை அபகரிக்கின்ற மாபெரும் அநீதியை—அத்தனகலை தொகுதி மக்களை விட இன்னும் வேகமாகவும் வீரமாகவும், உறுதியுடனும் எதிர்த்துப் போராடுவதற்கு தமிழ் மக்களுக்கு பரிபூரண உரிமை யுண்டல்லவா? அப்படி போராடுகின்ற தமிழ் மக்களை எதற்காக வகுப்புவாதிகள் என்று கூறுகிறீர்கள்?

தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒருவகை சனநாயகம்—அத்தனகலைத் தொகுதிக்கு மட்டும் பிறிதொரு வகை சனநாயகமா?

இன்று நாட்டில் இயங்குவது சனநாயகமல்ல — சிறிமாவோ நாயகம்தான்!

சனநாயகத்திற்கு பிரதமர் அளித்துள்ள புதிய வியாக்கியானம் இதைத்தான் நமக்கு உணர்த்[...]றது!

# தமிழாராய்ச்சி மாநாடும் அதன் எதிரொலிகளும்!

யாழ்ப்பாணத்தில் சனவரித் துவக்கத்தில் நடைபெறவிருக்கும் 4 வது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு குறித்து-நாளேடுகளில் வெளிவரும் செய்திகளும், வாதப் பிரதிவாதங்களும், பல உண்மைகளை இந்நாட்டுத் தமிழ் மக்கள் அறிந்து கொள்வதற்கு உறுதுணையாக இருக்கின்றன. அரசாங்கத்தின் தமிழ் விரோத மனப் போக்கையும், தமிழ்த் துரோகிகளின் ஈனத்தனமான செயல்களையும் தமிழ் மக்கள் அறிந்து கொள்ள முடிந்திருக்கிறது.

### மலேசியா

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு முதல் தடவையாக மலேசியத் திருநகரான கோலாலம்பூரில் சிறப்புற நடைபெற்றது. இந்த மாநாட்டுக்கு அங்குள்ள தமிழ் மக்கள் அனைவரும் ஆதரவு அளித்தனர். அரசாங்கமும் சகல உதவிகளையும் அளித்தது. மலேசியாவில் வாழும் எந்த ஒரு தமிழராவது, மாநாட்டுக்கு வருவோருக்குவிசாவழங்கவேண்டாமென்றோ — மாநாட்டை தடைசெய்யும்படியோ மலேசிய அரசிடம் கோரிக்கை விடவில்லை;

### தமிழ் நாடு

இரண்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு, சிங்காரச் சென்னை மாநகரில் பேரறிஞர் அண்ணாவின் நேரடி மேற்பார்வையின் கீழ் தமிழக வரலாறே இதற்கு முன் காணாத அளவு மாபெரும் தமிழ்த் திருவிழாவாக நடைபெற்றது: இந்த விழாவுக்கு இந்திய மத்திய அரசு சகல உதவிகளையும் அளித்தது தமிழாராய்ச்சி மாநாட்டையொட்டி சிறப்பு அஞ்சல் தலையை வெளியிட்டது. இந்தியக் குடியரசுத் தலைவரும், மாபெரும் கல்விமானுமான காலஞ்சென்ற ஜாகிர் உசேன் மாநாட்டைத் தொடங்கிவைத்து சிறப்பித்தார்.

### பாரிஸ்

மூன்றாவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு பாரிசில் நடைபெற்றது. இந்த மாநாட்டுக்கு பிரெஞ்சு அரசு எதுவித உதவியையும் செய்யவில்லை. ஒத்துழைப்பும் நல்கவில்லை. பிரெஞ்சு நாட்டு அமைச்சர்கள் யாரும் அழைக்கப்படவுமில்லை. சிறந்த ஆய்வுக் கருத்தரங்காக இது நடைபெற்றது. இந்த மாநாட்டுக்கு சென்றோருக்கு விசா வழங்குவதில் நாகரிகம்மிக்க பிரெஞ்சு அரசு எதுவிதத்திலும் 'பிகு' செய்யவில்லை.

### இலங்கை

நான்காவது மாநாடு 1974 சனவரியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது. இப்படியொரு மாநாடு ஈழத் தமிழகத்தில் நடைபெறுவது தமிழர்கள் செய்த பாக்கியமே!

ஆனால், ஈழத் தமிழர்கள் மத்தியிலேதான் துரோகிகளும் துட்டர்களும், காட்டிக் கொடுக்கவும் தயங்காத கயவர்களும் ஏராளமானோர் இருக்கிறார்கள். இவர்கள், இந்த மாநாட்டை பற்றி குழறுபடியான செய்திகளைத் தந்து எப்படியாவது குழப்பியடித்துவிட — மக்களின் மனதைக்கலைத்துவிட முயற்சித்து வருகிறார்கள். தமிழை எழுதி — தமிழால் வயிறு கழுவி வரும் தமிழ்ப்பத்திரிகைகளிலுள்ள ஆசிரியர்களும், எழுத்தாளர்களும் நிருபர்களும் தமிழ் மொழி மாநாட்டை இன்று கேவலப் படுத்தி, தமிழை அவமதித்து வருகிறார்கள்!

தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வரும் வெளிநாட்டு அறிஞர்களுக்கு 'விசா' வழங்கவேண்டாமென்றும் தமிழாராய்ச்சி மாநாட்டையே தடை செய்து விட வேண்டுமென்றும் நல்லூர் பா. உ. திரு. சி. அருளம்பலம் அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

தமிழர்களே! இரத்தக் கண்ணீர் வடியுங்கள்! நல்லூர்த் தொகுதியின் தன்மானத் தமிழர்களே! நாகநாதன் என்ற தமிழ்ச் சிங்கம் கோலோச்சிய தொகுதியிலிருந்து, தமிழர்களுக்கு தீராத வடுவை தேடித் தந்திருக்கும் ஒரு பிரதிநிதியை தெரிவு செய்துவிட்ட உங்கள் பாவத்தை எண்ணி கண்ணீர் விடுங்கள்! அதைவிட இப்போது உங்களால் வேறு என்ன செய்திட முடியும்?

### அழியாத வடு!

தமிழாராய்ச்சி மாநாட்டை தடை செய்ய வேண்டுமென்று ஒரு சிங்களவன் கூறவில்லை — அப்படிக் கூறியிருந்தாலும் கூட பரவாயில்லை. ஒரு தமிழன், அதுவும் ஒரு தமிழ் தொகுதியின் பிரதிநிதி இப்படிக் கூறியிருக்கிறுரென்றால் — உலகத் தமிழர் அரங்கில் ஈழத் தமிழனுக்கு ஏற்பட்டுள்ள இந்த வடு, அழியாத வடுவாக, நீங்காத கறையாக என்றென்றும் இருந்து கொண்டிருக்கப் போகிறது!

### தன்னாட்சியின் அவசியம்!

இந்த மாநாட்டை கொழும்பில் நடத்தினால் தான் அரசு ஆதரவு கொடுக்கும்— யாழ்ப்பாணத்தில் வைத்தால் ஆதரவு கிடைக்காது: வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா வழங்க அரசு மறுக்கலாம் — என்று கூறியிருக்கிறார் பாதுகாப்புத்துறை துணை அமைச்சர்!

இதன் பொருள் என்ன? இந்நாட்டுத் தமிழர்கள் தங்கள் எண்ணப்படி செயல்பட — அதுவும் சனநாயக உரிமைகளுக்குட்பட்டு செயல்படுவதற்குகூட — அரசு அனுமதிப்பதில்லை என்பதைத்தானே இது உணர்த்துகிறது.

தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில்வைக்

(7-ம் பக்கம் பார்க்க)

# மாநாட்டில் அரசு தலையிடுவது தமிழை நசுக்கும் முயற்சியே!

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் துணைத் தலைவர்களில் ஒருவரும் பிரபல வழக்கறிஞருமான திரு. ஏ. சி. நடராசா தமிழாராய்ச்சி மாநாடு குறித்து பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளார்:-

யாழ்ப்பாணத்தில் 4-வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு ஆரம்பிப்பதற்கு சில தினங்களிருக்கையில் வெளி விவகாரப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் திரு. லக்ஷ்மன்ஜெயக்கொடி யாழ்ப்பாணத்தில் மாநாடு நடைபெறுவதற்கு பகிரங்கமாக ஆட்சேபம் தெரிவித்திருப்பது வருத்தத்திற்குரியதாகும். மிகப்பெரிய மாநாட்டிற்கான திட்டங்களை கடைசி நேரத்தில் மாற்றுவது எவருக்குமே முடியாத காரியமாகும் யாராயிருந்தாலும் சரி கடைசி நேரத்தில் மாற்றமுடியுமா?

இம்மகாநாடு சம்பந்தமாக, ஏற்கனவே எடுக்கப்பட்ட பெரும் பகுதி வேலை [illegible] கலப்பிருப்பதாக பிரதி அமைச்சர் திரு. ஜெயக் கொடியும், மற்றும் சிலரும் சந்தேகிப்பதினால் பாதிக்கப்படும் நிலையில் உள்ளது.

புதிய அரசியல் திட்டத்தில தமிழ்மொழிக்கு உரிமை அளிக்காமல் திட்டமிட்டு நசுக்கிவரும் அரசாங்கத்தின் பிரதிநிதியொருவர் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு சம்பந்தமாக இவ்விதம் நடந்து கொள்வது ஆச்சரியப்படக் கூடியதொன்றலல.

நாய் ஒன்றைச் சுட்டுக் கொல்வதற்கு முன்னர் அதற்கு விசர்ப்பட்டம் இட்டு காலனி ஆதிக்க நாடுகளில் பிரிட்டிஷ் ஆட்சியாளர் கடைப்பிடித்துவரும் ஒரு கொள்கையாகும். தங்களுடைய நடவடிக்கைகளைச் சரியென நிரூபிப்பதற்காகவே இவ்விதம் அவர்கள் செய்கின்றார்கள்.

தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டிற்கு பிரதி அமைச்சர் திரு. ஜெயக்கொடி கொழும்பை விரும்புவதேன்? இந்தியாவில் இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடைபெற்றபோது, [...]ரும் இந்தியாவின் தலைநகரான புது டில்லியில் வைக்கும்படி ஏன் ஆலோசனை கூறவில்லை?

இம்மகாநாடு பற்றி யாழ்ப்பாணத்தில் வாழும் பல்லாயிரக் கணக்கான மக்கள், அக்கறையும் ஆவலும் கொண்டுள்ளார்கள். இம் மகாநாட்டிற்கான சகல உதவிகளையும் வழங்க யாழ். மக்கள் தயாராக இருக்கின்றார்கள்.

கொழும்பில் இம்மகாநாட்டை வைக்கவேண்டுமென்று சுமார், 200 மக்கள் [...]ட விருப்பமுள்ளவர்களாக இருக்கமாட்டார்கள். மறுபுறத்தில் குழப்பம் விளைவிக்க விரும்பும் 100 பேர்கள் இம் மகாநாட்டை குழப்பிவிட முடியும்.

மகாநாட்டு அலுவல்கள் முன்னேறி வரும் இந்நிலையில் அரசாங்கம் தலையிட முயற்சிப்பது மிகவும் அவமானமான செயலாக இருக்கும். இது, இந்நாட்டில் தமிழ் மொழியை நசுக்குவதற்கு எடுக்கப்படும் மற்றுமொரு முயற்சியாகவே கருதப்படவேண்டும்.

ஏ. சி. நடராசா
வழக்கறிஞர்
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன, மொழியடிப்படையில் புள்ளிகளை மாற்றுவதற்குப் பெயர்தான் 'தரப்படுத்தல்'!

## தமிழ் மாணவர்களின் கல்வி வாய்ப்பு இதனால் மறுக்கப்படுகிறது!

### புள்ளிகள் மாருட்டத்தை திறுத்துங்கள்! பூரணம்பிள்ளையின் துணிவான பேச்சு!

''மாணவர்களுக்குக் கிடைக்கும் புள்ளிகள் மொழி அடிப்படையில் இனவாத முறையில் மாற்றங்களுக்கு உள்ளாக்கப்படுகிறது. இதைத்தான் தரப்படுத்தல் என்று வர்ணிக்கிறார்கள். இது மனித அடிப்படை உரிமைகளுக்கு மாறானது.''

யாழ். வேம்படி வீதி றிம்மர் மண்டபத்தில் மனிதஉரிமைகள்பற்றி நடந்த கருத்தரங்கில் புனிதயோவான் கல்லூரி அதிபர் திரு. க. பூரணம்பிள்ளை மேற்கண்டவாறுகூறினார்.

திரு பூரணம்பிள்ளைமேலும் கூறியதாவது: ''திறமையின் அடிப்படையில் உயர்கல்விக்கான வசதிகளைப் பெறும்சம வாய்ப்பு யாவருக்கும் உறுதியளிக்கப்பட்டுளளது—மனித உரிமைகள் சாசனத்தால். நாம் அதை மீறுவது மனித உரிமையை மீறுவதாகும்.

அன்றைய நிலை

ஒருகாலத்தில் கிறிஸ்தவர்கள் தமது சனத்தொகைவிகிதத்துக்கு மிகமிக அதிகமாக பல்கலைக்கழகப் பிரவேசத்தைப் பெற்று வந்தனர். 1937ம் ஆண்டுவரையில் பல்கலைக்கழக பிரவேசம் பெற்றவர்களில் 30 விகிதத்துக்கு மேற்பட்டோர் கிறிஸ்தவர்களாகவிருந்தனர்.

அப்போதைய அரசின் பாரபட்ச நடவடிக்கைகளால் இது நடைபெற்றதல்ல. நாட்டில கிறிஸ்தவ மிஷனரிமாரே முதன்முதலாகக்கல்லூரிகளை அமைத்து உயர்கல்வி அளித்துவந்ததாலேயே அப்படி ஒரு நிலைமை இருந்தது.

காலம் செல்லச்செல்ல பிறமத ஸ்தாபனங்களும் தனிப்பட்டவர்களும் பாடசாலைகளை அமைத்துநிர்வகிக்கத் தொடங்கியதும் மேற்படி நிலைமை தானகவே மாறிவிட்டது.

அது போன்றே பொதுச் சேவைகளிலும் அண்மைக் காலம்வரை தமிழர்கள் தமது சனத்தொகை விகிதாசாரத்துக்கு மிகமிக அதிமான இடங்களைப்பெற்று இருந்தார்கள். இந்தஏற்றத் தாழ்வுகள் இன்று கிடையாது. வசதிகள் வாய்ப்புகள் நாடு அனைத்துக்கும் பரவலாக்கப்பட்டதும் தனி சாகியத்தினரோ மதத்தினரோ அனுபவித்து வந்த ஆதிக்கம் தானகவே மறைந்து போயிற்று.

மனித உரிமைக்கு முரணானது

ஆனல் இன்றோ செயற்கை முறையில் தரப்படுத்துதல் திட்டத்தால் இனவாதஅடிப்படையில் தமிழ் மாணவர்களுக்குப் பல்கலைக்கழக பிரவேசத்துக்குள்ள வாய்ப்பு மட்டுப்படுத்தப்படுகிறது — மறுக்கப்படுகிறது.

மாணவர்களுக்குக் கிடைக்கும் புள்ளிகள் மொழி அடிப்படையில் இனவாத முறையில் மாற்றங்களுக்கு உள்ளாக்கப்படுகிறது. இதைத்தான் தரப்படுத்தல் என்று வர்ணிக்கிறார்கள். இதுமனித அடிப்படை உரிமைகளுக்கு மாறானது.

''இதில்பிறிதொன்றையும் அவதானித்தாக வேண்டும்: கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சை ஒரு தகைமைப் பரீட்சை. இதை யாரும் மறந்து போகப் படாது. பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் யாவரும் ஒரு குறிப்பிட்ட தகுதியை, தராதரத்தை எய்தியுள்ளனரா இல்லையா என்பதை நிர்ணயிக்க வேண்டிய பரீட்சையும் அது. அந்தத் தகைமையை அடைந்துள்ள ஒவ்வொரு மாணவருக்கும் அதற்கான சான்றிதழைப் பெறும் உரிமையுண்டு. அதை வழங்கியே ஆகவேண்டும்.

வாதத்துக்காக பல்கலைக்கழகப் பிரவேசத்துக்கு தரப்படுத்தல் உரிய, சரியான கொள்கையென்று கொள்ளினும், — நான் அப்படிச் சொல்லமாட்டேன்— அதற்காக ஒரு குறிப்பிட்ட தகைமையை அடைந்த மாணவனுக்கு கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சைக்கான சான்றிதழை மறுக்கத்தான் வேண்டுமா? அது அடாத செயல். ஏனெனில் அதைப் பெறுவதற்கு தகைமை முறையால் அவன் உரிமை பெற்றுள்ளான்; பல்கலைக்கழகப் பிரவேசம் கிடைத்தாலும் சரி அல்லது கிடைக்காவிட்டாலும் பாதகமில்லை தகைமைச் சான்றிதழ் அவனுக்குக் கிடைக்கக் குறுக்கே நிற்கப்படாது.

ஆகவே, பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பு முன்பே மாணவர்கள் பெற்றிருக்கும் புள்ளிகளை இனவாத மொழியடிப்படையில் அல்லது பிரதேச அடிப்படையில் தரப்படுத்துதல் என்று சொல்லி நிகழ்த்தப்படும் புள்ளிகள் மாருட்டம் உடன் நிறுத்தப் படவேண்டும். கல்வியில் நாட்டமுள்ளோர் அதை வலியுறுத்தக் கடமைப்பட்டுள்ளனர்.

# ஒரு சவால்!

'தரப்படுத்தல்' பற்றிக் கல்வியமைச்சர் மீண்டும் மீண்டும் பேசி வருகிறார். அண்மையில் தேசிய பேரவையிலும் அவர் பேசியிருக்கிறார்.

தரப்படுத்தல் திட்டத்தின் மூலம், தமிழ் மாணவர்கள் பாதிக்கப்படவில்லையென்றும், முஸ்லிம் மாணவர்களே பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

கல்வியமைச்சரின் கூற்றை வாதத்துக்கு ஒப்புக்கொண்டு—தரப்படுத்தல் மூலம் முஸ்லிம் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளது உண்மையானல்—தன் சமூகத்துக்கே துரோகம் விளைக்கின்ற கல்வியமைச்சர் எப்படிப்பட்டவர் என்பது பற்றி சிந்திக்கும் பொறுப்பை முஸ்லிம் சகோதரர்களுக்கே விட்டு விடுகிறோம்.

அதே சமயத்தில் கல்வியமைச்சரிடம் ஒரேயொரு சின்னக்கேள்வியை மட்டும் கேட்கிறோம்—தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்கள் பாதிக்கப்படவில்லையென்பது உண்மையானல்—உங்கள் கூற்று அந்தரங்க சுத்தி நிறைந்தது என்றால்—பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையில் மாணவர்கள் திறமை அடிப்படையில் எடுத்த புள்ளிகளை—தரப்படுத்தப்படாத புள்ளிகளை—அப்படியே வெளியிடும்படி கோருகிறோம்.

தரப்படுத்தலில் தவறு நடக்கவில்லையென்றால்—நேர்மையிருந்தால்—நமது இக்கோரிக்கைக்கு கல்வியமைச்சர் செவிசாய்க்கட்டும்!

---

கல்வியில் தரப்படுத்தல் சரியெனில் அதைப் பிற துறைகளிலும் புகுத்தவேண்டியதே; எதற்காகக் கல்விக்கு என்று அதை மட்டுப்படுத்தல்வேண்டும்?

தமிழ் புத்தகத்துக்கு தடை!

திரு. கு. நேசையா பேசும்பொழுது, கூறியதாவது:—

மனித உரிமைகளுள் முதன்மையான தகவல்களையும், கருத்துக்களையும் பத்திரிகைகள், சினிமா, பருவ வெளியீடுகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் எதன் வாயிலாகவும் நாட்டெல்லைகளையும் அனுசரியாது எவ்விடத்தில் இருந்தேனும பெற்றுக் கொள்ளலாமென உரிமையளிக்கப்பட்டிருப்பதைச் சொல்லலாம். இங்கு அப்படியான உரிமை வலியுறுத்தப்பட்டுள்ளதா?

தமிழ் நாட்டில் இருந்து தமிழ்ப் புத்தகங்கள், பத்திரிகைகள், பருவ வெளியீடுகள், சினிமாப் படங்கள் இவற்றுக்கு மட்டுமே போடப்பட்டுள்ள தடைகள் மனிதஉரிமைகளுக்குப் புறம்பான தடைகளே.

உலகில் புத்தகங்கள் தினம் தினம் வெளிவந்து கொண்டு இருக்கின்றன. சின்னஞ்சிறிய டென்மார்க் தேசத்திலும் ஒரு வருடத்துக்கு சுமார் ஓராயிரத்துக்கு அதிகமான புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. இங்கோ பாடப் புத்தகங்களையும் கணக்கில் கொண்டாலும், தமிழில் ஒரு நூறு புத்தகங்கள் தேறுவது அரிது. அப்படி நிலைமை இருக்கும் போது தமிழ் நாட்டில் இருந்து தகவல் எந்த உருவில் வந்தாலும் இரு கை நீட்டி உவப்புடன் வரவேற்க வேண்டியவர்களாக இந்நாட்டுத் தமிழ் மக்கள் இருக்கிறார்கள்.

அதென்ன தமிழ் நாட்டில் இருந்துவரும் தமிழ்ப் புதினப் பத்திரிகைகள், புத்தகங்கள், சஞ்சிகைகள், பருவ வெளியீடுகள், சினிமா படங்களுக்கு மட்டும் தனிப்பட்ட ஒரு தடை? இந்தியாவில் இருந்து வருவதானல் இந்தியில வரலாம், ஆங்கிலத்தில் வரலாம் தமிழில் மட்டும் ஆகாது. ஏன் இந்தப் பைத்தியம்? வேறு மொழியில் என்னவும் வரலாம், எங்கிருந்தும் வரலாம் தமிழ் மொழிக்குமட்டும் ஏன் இந்த விசேஷ புறக்கணிப்பு, கதவடைப்பு என்று கேட்கத் தோன்றுகிறது.

''புதிய அரசமைப்புத்திட்டத்தின் ஆரம்ப வரியே பௌத்த ஆண்டைக் குறிப்பிட்டு, இஸ்லாமிய கிறிஸ்தவ, இந்து, தமிழ் வருடங்களைக் குறிப்பிடத் தவறிவிட்டது. முதல் கோணல் முற்றுங்கோணல் என்று சொல்வார்களே அது போல, தமிழ்ப்பேசும் மக்களுக்கு மனித அடிப்படை ஆதார உரிமைகள் எதற்கும் அதில் உறுதியில்லை, உத்தரவாதம் இல்லையென்று 'இந்து சாசன'' ஆசிரியர் திரு. சிவப்பிரகாசம் பேசுகையில் குறிப்பிட்டார்.

வண. தனிநாயக அடிகளார், ஆர்ச் டீக்கன் ஞானப்பிரகாசம், வழக்குரைஞர் பொன்னையா, டாக்டர் என். சிவஞானரத்தினம், இளைப்பாறிய மாவட்ட நீதியரசர் தம்பித்துரை, இளைப்பாறிய கல்வி அதிபர் திரு. சோமசேகரம் ஆகியோர் உள்ளடக்க கருத்தரங்கில் அனேகர் பங்குபற்றினர்.

---

தமிழக சஞ்சிகைகளைத் தடை செய்தால்—

# ஈழத் தமிழர் தனித்து ஒதுங்கி அழியும் நிலையை உருவாக்கும்!

## விரும்பாத விளைவுகளும் ஏற்படும்!

### அமைச்சருக்கு விவேகானந்தசபை மகஜர்!

'இலங்கையின் மக்கட் தொகையில் தமிழ் பேசும் மக்கள் குறிப்பிடத்தக்க சிறுபான்மை மக்களாக விளங்குவதோடு இந்நாட்டின் அரசியல், பொருளாதார பண்பாட்டு முன்னேற்றத்திற்கு உரிய பங்கினையும் செலுத்தியுள்ளனர்.

மிகத் தொன்மைக் காலம் தொட்டு தென்னிந்தியத் தமிழருடனும், ஏனைய மொழிக் குழுவினருடனும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு நெருங்கிய தொடர்பும், பண்பாட்டு உறவும் நிலவி வந்துள்ளது. இப்பண்பாட்டுத் தொடர்பினல் மிகப் பெருமளவு நன்மையையும் நம்மவர் பெற்றுள்ளனர். சமயம், இலக்கியம், கவின் கலை, கட்டிடக்கலை (குறிப்பாக கோயிற் கட்டிடக்கலை) சிற்பம் உருவ வழிபாடு, ஆய்வு ஆகிய துறைகளில் தமிழ் நாடு அடைந்துள்ள பெரும் முன்னேற்றங்களை இம் மக்கள் உணர்ந்துள்ளனர்.

திராவிடப் பண்பாட்டின் தொன்மையும் ஏனைய பண்பாடுகளின் வளர்ச்சியில் இது ஏற்படுத்திய செல்வாக்கும் இன்று மிகக் கூடிய அளவு உணரப்படுகின்றது. திராவிட மொழிகளில் மிகத் தொன்மை வாய்ந்த மொழியாகிய தமிழ் மொழி மிகப் பழைய காலந்தொட்டு இயல், இசை, நாடகம், ஆகிய முத்துறைகளை உள்ளடக்கி முத்தமிழ் என்றுவழங்கப்படுகின்றது.

மிக நீண்ட காலமாக புலவர், சமயச் சான்றோர், மெய்விளக்கவல்லுநர், இலக்கண வல்லுநர், எழுத்தாளர் இம்மொழியை வளம்படுத்தி மிகப் பழைய காலந்தொட்டு எம் தமிழினம் பண்பாட்டில் பெற்ற உன்னத நிலையை உலகிற்கு எடுத்துக்காட்ட உறுதுணை புரிந்துள்ளனர். இடை வெளியின்றி இம்மரபு காக்கப்பட்டதோடு கவிதை, சமயம் மற்றும் ஏனைய இலக்கியங்கள் ஆகிய துறைகளில் ஈழம் வாழ் தமிழர் குறிப்பிடத்தக்க பங்கினைச் செலுத்தியுள்ளனர்.

இத்தகைய பங்கினை இவர்கள் செலுத்துவதற்கு பாக்கு நீரிணைக்கு அப்பால் ஏற்பட்ட வளர்ச்சியே எப்பொழுதும் தூண்டுகோலாக அமைந்துள்ளது.

இன்று ஈழத் தமிழரிடை குறிப்பிடத்தக்க ஆற்றல் வாய்ந்த புலவர்கள், எழுத்தாளர்கள், உரையாசிரியர்கள் வாழ்வதற்கு இவ்விரண்டு பகுதிகளுக்குமிடையில் நிலவும் பண்பாட்டுத் தொடர்புகளே முக்கிய காரணமாகும்.

இந் நிலையில் அறிவின் ஊற்றாக விளங்கும் எண்ணங்கள் அல்லது கருத்துக்கள் இவ்விரு பகுதிகளுக்குமிடையில் பரிமாறப்படுவதற்கு தடை இருப்பின் ஈழத்தில் தமிழ் மொழியின் வளர்ச்சி, குறிப்பாக அதன் கவிதை, இலகியம் நாடகம், கவின்கலைகள் ஆகியன பெரிதும் பாதிக்கப்படும்.

தற்போதைய உள்நாட்டுப் புலமையாளர்கள் சிலர் தமிழ் நாட்டிலிருந்து சஞ்சிகைகள் வெளியீடுகள் தங்கு தடையின்றி இங்கு வருவிக்கப்படின் இந்நாட்டில் உருவாகவிருக்கும் ஆக்கப் படைப்புகளின் தன்மையை, அல்லது அளவை பாதிக்குமென்று கருதுவார்களாயின் அவர்களுடைய சிந்தனை தவறான வழியிலேயேசெல்கிறது என்று கருதப்பட வேண்டியுளது.

மொழிதமிழாயிருப்பினும் சரி, வடமொழியாயிருப்பினும் சரி அல்லது வேறெம் மொழியாயிருப்பினும் கவலையில்லை, அது அடிப்படையில் ஒரு எண்ணத்தின் கருவியாகும். அது அதன் இலக்கியத்தினூடாக வெளியே உணர்த்தப்படும் பண்பாட்டின் திறத்தினல் மிக்க முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தையே வென்றுவிட்டது சிங்கள ஏகாதிபத்தியம்!

## எட்டப்பர்கள் அடிக்கும் கொட்டங்கள்!

உங்கள் சயிக்கிள் ரயர்கள் தேய்ந்து விட்டனவா? புதிய ரயர்கள் வேண்டுமா?.

வீடுகட்ட அல்லது திருத்த சிமெந்து இல்லை. சிமெந்து வேண்டுமா?

கடல் தொழிலுக்கு நூல்—வலை வேண்டுமா?

கொழும்பில் காட்டுறதைக் காட்டி — கொடுப்பதைக்கொடுத்து உத்தியோகம் பெற சிபாரிசுக் கடிதம் வேண்டுமா?

இவற்றையும், இன்ன பிறவற்றையும் பெற யாழ்ப்பாண நகரில் ஒருவர் இருக்கிறார்: அவர் யாரென்று சொல்லத்தேவையில்லை. உங்களுக்கு தெரியும்.

சுதந்திரக் கட்சியின் யாழ் நகர் 'சோல் ஏஜன்ட்' அவர்தான்!

பல நோக்கு கூட்டுறவுச் சங்கமா? அவர்தான் தலைவர்.

கடல் தொழில் கூட்டுறவுச் சங்கமா, அதற்கும் அவரேதான் தலைவர்!

இன்னும் மரக்கறி, முட்டை இவற்றிற்கு கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்படவில்லை. இல்லாவிட்டால் அவற்றிற்கும் அவரேதான் தலைவர்!

கூட்டுறவுக்கும் துரையப்பருக்கும் என்ன உறவு, தொடர்பு என்று கேட்காதீர்கள்.

கூட்டுறவுப் பக்கம் தலைவைத்துப் படுத்ததே கிடையாது. அவரது வாழ் நாளில் ஒரு 50சதம் செலுத்தி ஒரு கூட்டுறவு சங்கத்தில் அவர் அங்கத்தவராக இருந்திருப்பாரோ என்பது ஐமிச்சத்திலும் ஐமிச்சம்!

அதிலும் கடல் தொழில் சம்பந்தமான அறிவு ஒரே ஞான சூனியம்!

குலாம் காதருக்கும் கோகிலாஷ்டமிக்கும் என்ன தொடர்போ அதே தொடர்புதான் துரையப்பருக்கும் கடற்றொழிலுக்கும்!

அப்படியென்றால் இதற்கெல்லாம் தலைமை தாங்கும் 'தகுதி'—'திறமை' எப்படி வந்தது?

அதுதான் சொன்னேமே. சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் 'சோல் ஏஜண்டாக' இருக்கும் ஒரே தகுதி போதாதா?

சிங்கள ஏகாதிபத்தியம் தமிழ்மக்களிடையே எட்டப்பர்களை உருவாக்குவதில் வெள்ளை ஏகாதிபத்தியத்தை தோற்கடித்துவிட்டது!

வெள்ளைக்காரனிடமாவது கொஞ்சம்வெட்கம், மானம், நீதி, நியாயம்; ஈன இரக்கம், தயவு—தாட்சணியம் இருந்தது!

ஒரு பூனையை தூக்கில் போடுவதென்றாலும் அதற்கொரு பூரண விசாரணை வைத்துவிட்டுத்தான் அப்படிச்செய்வார்கள்!

சிங்கள ஏகாதிபத்தியத்திடம் இவை மருந்துக்கும் கிடையாது!

வெள்ளை ஏகாதிபத்தியம் ஒளிவு — மறைவாக, இலைமறை காயாகச் செய்ததை சிங்கள ஏகாதிபத்தியம், வெட்ட — வெளிச்சமாக, வெட்டொன்று துண்டு இரண்டாக செய்து வருகிறது.

இரண்டு ஏகாதிபத்தியத்துக்கும் இடையில் உள்ள மிகப்பெரிய வித்தியாசம் இதுதான்.

வெள்ளைக்காரன் வந்தான், ஆண்டான், போய் விட்டான். தமிழ்மொழி, கலை, கலாச்சாரம் தற்காலிக தாக்குதலுக்கு மட்டும் உள்ளாயிற்று.

ஆனால் இலங்கை சுதந்திரமடைந்த கடந்த இருபத்து ஐந்து வருடங்களில் தமிழினத்தின் பாரம்பரிய பூமியே சிங்கள ஏகாதிபத்தியத்தின் 'பசி'க்கு 'இரை'யாகிவிட்டன.

தமிழ்மொழி மீதும் சிங்கள மொழியின் ஊடுருவல் மெல்லமெல்ல ஆனால்நிச்சயமாக ஏற்பட்டு வருகிறது.

தமிழ்ப் பிரதேசங்கள் 'காலனி' ஆட்சி முறைப்படி ஆளப்பட்டுவருகின்றன.

தமிழ் மாவட்டங்களில் தமிழ் அரசாங்க அதிபர்கள் இருந்தகாலம் கனவாய் பழங்கதையாய் ஆகிவிட்டது ஒரு மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் சிங்களவரே அரசாங்க அதிபர்களாக இருக்கிறார்கள். இது தற்செயலானதல்ல. திட்டமிட்டுச்செய்யப்படுகிறது. திறமையான தமிழ் உயர்தர உத்தியோகத்தர்கள் அநாமதேயமாக மூலையில் கிடக்கிறார்கள்,

அண்மையில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ஒய்வில் போனபொழுதுகூட அவருக்கு அடுத்தபடியாக அங்கிருந்த தமிழர் பதில் அரசாங்க அதிபராக ஒரு மாதத்துக்கேனும் கடமையாற்ற அனுமதிக்கப் படவில்லை. அரசாங்கம் வெளிமாகாணத்திலிருந்தே ஒருவரை பதில் அரசாங்க அதிபராக இறக்குமதி செய்திருக்கிறது!

திருமலை மட்டக்களப்பு உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டு அவற்றின் ஆட்சிப்பொறுப்பு சிங்கள அதிகாரிகளின் கையிலேதான் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது! அவர்களுக்கு வழிவிட்டுக்கொடுப்பதுபோல் தமிழ் அதிகாரிகள் மாற்றப் பட்டிருக்கிறார்கள்.

கண்டி மாநாகரசபை—வேண்டாம், தெற்கில் உள்ள ஒரு சின்ன ஊராட்சி மன்றத்தை கலைத்து விட்டு, அதன் ஆட்சிப்பொறுப்பை ஒரு தமிழ் அதிகாரியின் கையில் கொடுக்க இந்த அரசாங்கம் கனவிலும் நினைக்காதே!

சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஊடுருவல் இடம்மொழி நிர்வாகம் இவற்றுடன் நின்று விடவில்லை. அரசியல் ரீதியிலும் அது தலைகாட்டத் தொடங்கிவிட்டது.

மன்னார், வவுனியா மாவட்ட அரசியல் அதிகாரி ஒரு தமிழ் பேசும பாராளுமன்ற உறுப்பினர் அல்ல. மன்னாரிலிருந்து ஐம்பது மைலுக்கு அப்பால் உள்ள அனுராதபுரத் தொகுதி உறுப்பினர் அரசியல் அதிகாரியாக அங்கு நியமிக்கப்பட்டுள்ளார்!

ஒரு தமிழ் எட்டப்பர் கூட அரசாங்கத்தின் நம்பிக்கையை பெறமுடியவில்லையோ அல்லது ஒருவரும் அகப்படாத குறையோ தெரியாது!

அடுத்த வருட ஆரம்பம் தொடக்கம் அமுலுக்கு வரும் நீதிமன்ற சீர்திருத்த, சட்டங்களின்படி, மன்னார், வவுனியா மாவட்டங்கள் அனுராதபுர மாவட்ட நீதிபரிபாலனத்துக்குள் கொண்டு வரப்பட இருக்கிறது!

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து மனிதனைக் கடித்த கதையைத்தான் இந்த மாற்றம் ஞாபகப் படுத்துகிறது,

சிங்கள ஏகாதிபத்தியம் திட்டமிட்டபடி தமிழ் இனத்தை அழித்தொழிப்பதற்கு ஒன்றன் பின் ஒன்றாக துரிதவேகத்தில் நடவடிக்கை எடுத்து வருகிற தென்பதற்கு இன்னும் ஆதாரம் வேண்டுமா?

இந்த இன ஒழிப்பை கச்சிதமாக செய்து முடிக்கவே துரையப்பர் போன்ற எட்டப்பர்களை கொடுப்பதைக் கொடுத்து உருவாக்குகிறதென்று சொல்லித்தான் தெரியவேண்டுமா?

தமிழ் இனத்தின் துரதிட்டம் தமிழ் எட்டப்பர்கள் மிக மலிவாக சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு விலைபோய் விடுகிறார்கள்.

—வணங்காமுடி

---

### மறைந்த தொண்டருக்கு செல்லத்தம்பு அஞ்சலி!

பிரபல வழக்கறிஞரும், வவுனியா மாவட்ட தமிழர் கூட்டணிக்கிளையின் தலைவருமான திரு. குமாரவேலு அய்யாத்துரை ஜே. பி. யூ. எம். அவர்கள் தனது 63ஆவது வயதில் 8.12.73 சனிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

37 வருட காலம் வவுனியாவில் வழக்கறிஞராக கடமைபுரிந்த திரு. குமாரவேலு அவர்கள், வவுனியாவின் முதல் வழக்கறிஞராக விளங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறந்த தமிழ்த்தொண்டராக விளங்கியதிரு. குமாரவேலு தமிழர் கூட்டணியின் வவுனியா மாவட்டக் கிளையின் தலைவராகவும் பணியாற்றினார்.

இவரது இறுதிச்சடங்கின்போது, வவுனியா பா.உ. திரு. செல்லத்தம்பு அவர்கள் நேரில் வந்திருந்து தமிழர் கூட்டணிக் கொடியொன்றை அவரது பூதவுடல் மீது போர்த்தி தமது இறுதி அஞ்சலியை செலுத்தினார்.

தமிழர் கூட்டணியின் மற்றொரு பிரமுகரும் தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவருமான திரு. தா. சிவசிதம்பரம் அவர்களும் தமது இறுதி அஞ்சலியை செலுத்தினார்.

ஏராளமான கூட்டணித் தொண்டர்களும், தமிழ் பிரமுகர்களும், இறுதி யாத்திரையில கலந்துகொண்டனர்.

### கோட்டைக்கல்லாறு தமிழரசுக் கிளை தலைவர் மறைவு!

மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவையின் கோட்டைக் கல்லாற்றுக்கிளையின் ஆலோசகரும், தமிழரசுக்கிளையின் தலைவருமான திரு. கந்தையா அண்மையில் அகால மரணமடைந்தார்.

இவரது மரணத்தையொட்டி, தமிழ் இளைஞர் பேரவையினர், கோட்டைக்கல்லாறு எங்கும் கறுப்பு வெள்ளைக்கொடிகளைப் பறக்க விட்டு துக்கம் கொண்டாடியதுடன் அனுதாபம் தெரிவித்து அறிக்கையும் விடுத்தனர்.

---

## முத்தமிழ்க் காவலருக்கு நாவலர் பாராட்டு!

"ஈழத் தமிழர்களுக்கு இலங்கை அரசு செய்யும் அநீதி யாவற்றையும் தமிழகத்தில் நன்கு அறிந்துகொண்டவர்கள் மா. பொ. சி. அறிஞர். கி. ஆ. பெ.கலைஞர் கருணாநிதி, நாவலர் நெடுஞ்செழியன் ஆவர். இவர்களில் முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் அரசியலில் கலந்துகொள்ளாமல் தனித்துநின்று தமிழ்த்தொண்டு செய்து வருகின்றார். எமது தலைவர்களின் நடவடிக்கைகளை நன்கு கவனித்து ஆதரவு நல்கி வருகின்றார். மறைந்த கோப்பாய்கோமகன்தந்தை செல்வா ஆகிய இருவர் மேலும் அளப்பரிய அன்பு வைத்துள்ளார்.

"சென்னையில் நடைபெற்ற தமிழ் விழாவின் ஒரு அங்கமாக நடைபெற்ற பூம்புகார் விழாவின் சிறப்புக்கு கி. ஆ. பெ. அவர்களே காரண புருடராவர். நல்ல நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்டுள்ளார். தமிழ்த் தொண்டர்களை கௌரவித்து பணிபல செய்து வருகின்றார்.

திருக்குறளில் மூழ்கி அதிலிருந்து பல முத்துக்களைத் திரட்டி எமக்குத் தந்துள்ளார். தமது தெளிவான சிந்தனை மூலம் சிறப்பான பணிகள் செய்து வரும் இவருக்கு தமிழகத்தில் பதினறு தினங்களாக நடைபெற்ற முத்து விழாச் சிறப்பை கேட்டு மகிழ்ந்தோம்.

அதே சிறப்பை ஈழத்தில் வாழும் தமிழ் மக்களாகிய நாமும் அவருக்கு வழங்கிப் போற்றுவது கடமையாகும்.

—இவ்வாறு வழக்கம்பரை தமிழ் மன்றத்தினர் நடாத்திய முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதன் முத்து விழாவில் சிறப்புரை வழங்கிய நாவலர் அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில்நடைபெற்ற விழாவுக்கு மன்றத் தலைவர் சன். கந்தையா தலைமை வகித்தார். விழாவில் பெரும் திரளானவர்கள் கலந்து கொண்டனர். மன்றச் செயலாளர் திரு. க. வாமதேவன் நன்றியுரை கூறினார்.

### புதிய நிர்வாகிகள்

ஸ்ரீவாகீஸ்வரி நாடக மன்றத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் தலைவர் செ. செல்வரத்தினம் தலைமையில் கூட்டப்பட்டது. பின் வருவோர் புதிய நிர்வாகிகளாகதெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர். செ. அரசலிங்கம். செயலாளர் வீ. கே. தர்மகுலசிங்கம், பொருளாளர் செ. செல்வரத்தினம், நிர்வாகிகள்:- பொ. பங்கராசா, செ. சிதம்பரநாதன், க. இரத்தினலிங்கம்.

---

## தமிழ் தொழிற் சங்கங்களின் கூட்டணி உதயம்!

அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றிலுள்ள தமிழ் மொழி வழித் தொழிற் சங்கங்கள் அனைத்தும் "தமிழ் தொழிற் சங்கக் கூட்டணி" என்ற பெயருடைய தொழிற் சங்க சம்மேளனமாக ஒன்றிணைந்துள்ளன. இதன் ஆரம் கூட்டம் கொள்ளுப்பிட்டிக் தேயிலைப் பிரசாரச் சபை மண்டபத்தில் 10-12-73 திங்கட் கிழமை மாலை 4.00 மணிக்கு அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. நமசிவாயம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக வவுனியாத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. [illegible] செல்லத்தம்பு அவர்களும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. எம்.எஸ். செல்லச்சாமி அவர்களும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

ஒன்றிணைந்துள்ள ஒன்பது தமிழ் மொழி வழித் தொழிற் சங்கங்கள் வருமாறு:—

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம். புகைவண்டிப் பகுதி ஊழியர் சங்கம், இலங்கைத் தொழிலாளர் கழகம், தமிழ் தட்டெழுத்தாளர் சங்கம், துறைமுக நாவாய் இயக்குனர் சங்கம், மத்திய வங்கி ஊழியர் சங்கம், துறைமுக வழிகாட்டி ஊழியர் சங்கம், கூட்டுத்தாபன ஊழியர் சங்கம்.

[illegible] வோர் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்:- திரு. த. நமசிவாயம், துணைத் தலைவர்கள்:- திரு. ஜி. டி. செல்வராசா, திரு. வே. குணரத்தினம், செயலாளர் நாயகம்:- திரு. இ. பேரின்பநாயகம், இணைச் செயலாளர்கள்:- திரு. ஆனந்தராசா, திரு. ஐ. சி. சம்பந்தன், இணைப் பொருளாளர்கள்:- திரு. கணேசமூர்த்தி, திரு. ஆ. பரஞ்சோதி.

செயற்குழு உறுப்பினர்கள்:- மரியநாயகம், மா. க. கனகேந்திரன், கா. ச. மரியாம் பிள்ளை, மு. பரராசசிங்கம், சி. மதியாபரணம், க. கணபதிப்பிள்ளை, நா. பாலசுப்பிரமணியம்' சி. அருச்சுனு, சி. இலிங்கவேலாயுதம்.

கணக்காய்வாளர்:- திரு. க. ஜெயராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்கள் வெளியீட்டு விழா!

திரு. பொ. சண்முகநாதனின் நகைச்சுவை நாடகமாகிய 'இதோ, ஒரு நாடகம்' திரு. இரா. பாலச்சந்திரனின் சிறுகதைத் தொகுதியான 'தேன் நிலவுப் பயணம்' ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா இன்று (23. 12. 73) மாலை 6.00 மணிக்கு மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இரசிகமணி கனக செந்திநாதன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் புத்தொளி வரவேற்புரை நிகழ்த்துவார். இதோ ஒரு நாடகம் நூலை கலையரசு சொர்ணலிங்கமும், தேன் நிலவுப் பயணம் நூலை சொக்கனும் வெளியிட்டு வைப்பார்கள்.

வித்துவான் க.ந. வேலன், தேவன்—யாழ்ப்பாணம், க. கணேசலிங்கம், செம்பியன் செல்வன், குறமகள், ஏ. ரி. பொன்னுத்துரை ஆகியோர் ஆய்வுரை செய்வார்கள்.

விழாவில் நவாலி இளம் கலைஞர் கழகத்தினரால் 'இதோ ஒரு நாடகம்' முதன் முதலாக மேடையேற்றப்படும்.

# தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கி உபசரிக்கவும், உணவும் உறையுளும் வழங்கவும் வசதிபடைத்த பல தமிழ்க் குடும்பங்கள் போட்டிபோட்டுக்கொண்டு ஆர்வத்துடன் முன் வந்திருப்பதாக தெரிவித்தார்.

## அரசின் தடை

தமிழாராய்ச்சி மாநாட்டையொட்டிய கொடி தினத்தில் பாடசாலைகளில் கொடிகளை விற்பனை செய்வதற்கு கூட கல்வியமைச்சு தடைவிதித்துள்ளது, அரசின் தமிழ்த்துவேஷத்துக்கு ஓர் எடுத்துக்காட்டென்றும், மாணவர்கள் பாடசாலை வாசலில் நின்று கொடி விற்பதை எந்தச் சட்டமும் தடுக்கமுடியாதென்றும் தமிழ் மாணவர்கள் கூறுகிறார்கள்.

போக்குவரத்து சுற்றுலாக் குழுத்தலைவராக உள்ள திரு. இ. பேரின்பநாயகம், நமது நிருபரிடம் பேசுகையில், மாநாட்டையொட்டிய போக்குவரத்துக்கள், மற்றும் அறிஞர்களை சுற்றுலாவுக்கு அழைத்துச்செல்லல் ஆகிய தேவைகளுக்கு இலவசமாகவே தங்கள் போக்குவரத்துச் சாதனங்களை தந்துதவ பலர் முன் வந்திருப்பதாக தெரிவித்தார்.

வரவேற்புக் குழுத்தலைவியாக கடமையாற்றும் திருமதி புனிதம் திருச்செல்வம் பொதுமக்களுக்கு விடுத்த வேண்டுகோள் ஒன்றில் — மாநாட்டுக்கு வரும் அறிஞர்கட்கு நமது பாரம்பரிய கலாசார முறைப்படி வரவேற்பு வழங்கப்படவுள்ளதாகவும், மாநாடு நடக்கும் நாட்களில் வரவேற்பு வளைவுகள், முத்துப்பந்தர்கள், முத்துச் சப்பரங்கள், சிகரங்கள் முதலியனவற்றை நகரின் தெருக்களிலும் சந்திகளிலும், மாநாட்டு அரங்குகட்கும் பொருட்காட்சி அரங்கிற்கும் அண்மையிலும் அமைத்து உதவவிரும்பும் தமிழன்பர்களை தம்முடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுள்ளார்.

## தொண்டர் படை

மாநாட்டுக்கும், மாநாட்டுக்கு வருகின்ற அறிஞர்கட்கும் தொண்டர்களாக பணியாற்றி உதவக் கூடிய இளைஞர்களையும் நங்கையரையும் மாநாட்டுத் தொண்டர் படையில் சேருமாறும் அவர் கோரியுள்ளார்.

அரசாங்கப் பாடசாலை மண்டபங்களையும் வீரசிங்கம் மண்டபம் போன்றவற்றையும் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு தரமுடியாது என்று அரசு மறுத்தது கண்டு கொதிப்படைந்த யாழ் நகரிலுள்ள தன்மானத் தமிழர்கள் பலர், மாநாடு நடத்திட தங்கள் சொந்தக் காணிகளையே தருவதற்கு ஆர்வத்துடன் முன்வந்திருப்பதாக மாநாடு அமைப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

எங்கும் பேரார்வம் கொழுந்து விட்டெரிகிறது— எங்கும் தமிழுணர்ச்சி வீறுபெற்றெழுந்துவிட்டது. இந்நிலையில் யார் தலைகீழாக நின்றாலும், தமிழாராய்ச்சி மாநாடு தமிழர்கள் பெருமைப்படத்தக்க விதத்தில், ஈழத்தமிழகத்துக்கு கீர்த்தி சேர்க்கும் விதத்தில் வெற்றிகரமாக நடைபெறும் என்றும் அவர்மேலும் தெரிவித்தார்.

# இதிலும் பாரபட்சம்

பிரபல இந்திய இசை மேதை—சிதார் வித்துவான் ரவி சங்கர் அவர்கள் இலங்கை வந்துள்ளார்கள். இவரை இங்கு அழைத்து— இசை நிகழ்ச்சிகள் நடத்தி நிதி சேகரிக்கிறது 'டைம்ஸ்' நிறுவனம்!

ஆட்சியாளர்களுக்கு பாத பூசை செய்யத் தொடங்கிய பின்னர், 'டைம்ஸ்' நிறுவனத்துக்கு இதற்கான அனுமதியை அரசு வழங்கியிருக்கிறது போலும்!

ஆனால் இந்நாட்டிலுள்ள தமிழ் மக்கள், சிவாஜிகணேசன், எம். ஜி. ஆர். போன்ற தமிழகக் கலைஞர்களை அழைத்து இங்கு கலை நிகழ்ச்சி நடத்த விரும்பினால் அதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

கலை நிகழ்ச்சி கூட வேண்டாம்—சாதாரணமாக தமிழகக் கலைஞர்கள் இங்கு வரவே அனுமதி மறுக்கப்படுகிறது.

இதிலும் தமிழ் மக்களுக்கு எதிராக—பாரபட்சம் காட்டப்படுகிறது. இதற்குப் பெயர்தான் இந்நாட்டில் 'சமதர்மம்'!

—

# கருணாநிதியின்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தும் போராட்டத்துக்குப் பின்னால்—தமிழக எதிர்க்கட்சிகள் அனைத்துமே வாயைப் பிளந்துகொண்டுநிற்கின்றன என்ற உண்மையை யாரும் மறுக்கமுடியாது.

மாணவர்களின் ஆதரவினால் பதவிக்கு வந்த தி. மு. கழக அரசை அதே மாணவர்களைக்கொண்டே கவிழ்த்துக் காட்டுகிறோம் என்று தமிழ் நாட்டு எதிர்க் கட்சிகள் முன்னிற்கின்றன.

முன்னைய எதிர்ப்புக்கள் அனைத்தையும் முறியடித்து வந்த கருணாநிதி மாணவர் கிளர்ச்சியை எப்படியும் சமாளித்து விடுவார் என்றே பலரும் எதிர்பார்க்கின்றனர். ஏனெனில் மாணவர்களின் நாடி நரம்புகளை பிடித்துப் பார்ப்பதில் கலைஞர் கெட்டிக்காரராயிற்றே!

# கோர்லேந்தி:

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் அரசாங்க ஆதரவு தொழிற் சங்கமான தொழிலாளர் தேசிய சங்கமும் இவ்வேலை நிறுத்தத்தில் பங்குபற்றியுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வேலைநிறுத்தத்தை ஆதரித்து தமிழ் தொழிற் சங்கங்களின் கூட்டணி பின்வரும் அறிக்கையை விடுத்தது:-

மலையகத் தோட்டத்தொழிலாளர்கள் ஆரம்பித்துள்ள வேலைநிறுத்தப் போராட்டம் முற்றிலும் நீதிநியாயத்துக்கு உட்பட்டதென தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி கருதுவதனால் இப்போராட்டத்துக்கு முழு ஆதரவையும் நல்குகின்றோம். நாட்டின் 85 சத வீத அந்நியச் செலாவணியை செந்நீர் சிந்தி உழைத்துத் தருகின்ற நம் தொழிலாளத் தோழர்கள் பட்டினியால் வாடிவதங்குவதைக்கண்டு அரசாங்கம் பாராமுகமாக இருப்பது சமதர்மகோட்பாட்டிற்குமுற்றிலும் முரணானது என கூட்டணி சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

குடியுரிமை தொடக்கம் உணவுரிமை சமூக மனித உரிமைகள் அனைத்தையும் நம்மலையகத் தொழிலாளர்கள் இழந்து பரிதவிக்கும் காட்சி எம் கண்ணில் நீர் பெருகச் செய்கின்றது. ''ஆற்றாது அழுத கண்ணீர் செல்வத்தைத் தேய்க்கும் படை'' என்ற வள்ளுவன் கூற்று அரசுக்கு வழிகாட்டியாக அமையவேண்டும். எனவே இவ்வேளையிலாவது அரசாங்கம் தலையிட்டு வேலை நிறுத்தத்துக்கான அடிப்படைக் காரணங்களை உணர்ந்து நீதி வழங்கவேண்டுமென கூட்டணி கோருகின்றது.

எமதருமை உடன் பிறப்பாம் மலையக மக்களின் போராட்டம் வெற்றிபெற வாழ்த்துகிறோம்;

—இவ் வேலை நிறுத்தத்தைப் பற்றிக் குறிப்பிட்ட திரு. தொண்டமான், ''எனது 34 வருட தொழிற் சங்க வாழ்வில் இப்படியொரு வெற்றிகரமான வேலைநிறுத்தத்தை நான் கண்டதேயில்லை'' என்று குறிப்பிட்டுள்ளார்.

# தமிழாராய்ச்சி மாநாடும்....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கக்கூடாது என்று அரசு பிடிவாதமாக இருப்பது, தந்தை செல்வா குறிப்பிட்டதைப்போல—தமிழ்ப்பிரதேசங்களுக்கு தன்னாட்சி இருப்பதன் அவசியத்தையும் இன்றியமையாமையையுமே எடுத்துக் காட்டுகிறது—தன்னாட்சிக் கோரிக்கைக்கு வலிவு சேர்க்கிறது.

## அரசியல் இலாபம்

அரசியல் இலாபம் பெறுவதற்காக யாழ்ப்பாணத்தில் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறுகிறதென்றால் — அதற்கு வருவோருக்கு எப்படி அரசு விசா வழங்கமுடியும் என்று கேட்டிருக்கிறார் திரு. லக்ஸ்மன் ஜெயக்கொடி!

அரசியல் இலாபம் என்று பார்த்தால் — வெளிநாட்டு அறிஞர்கள் இங்கு வருவதற்கு அனுமதிப்பதைவிட, அனுமதி வழங்க மறுப்பதுதான், தமிழர் கூட்டணிக்கு அதிக அளவு அரசியல் இலாபத்தையும், ஈழத்தமிழர் நிலையை வெளிநாட்டார் உணருகின்ற சூழ்நிலையையும் தோற்றுவிக்கும் என்பதை பாதுகாப்பு துணை அமைச்சர் உணரவேண்டும்.

## புறக்கணிப்பு!

மாநாட்டை தொடக்கி வைப்பதற்கு நாட்டின் குடியரசுத் தலைவர் அழைக்கப்பட்டிருந்தார். அந்த அழைப்பை ஏற்று யாழ்ப்பாணம் செல்ல முடியாமைக்கு அவர் வருத்தம் தெரிவித்து மாநாட்டு அழைப்பாளர்களுக்கு செய்தி அனுப்பியுள்ளார்.

சிங்களம் பௌத்த மதம் சம்பந்தப்பட்ட சின்னச் சின்ன நிகழ்ச்சிகள் பலவற்றுக்கும் செல்லுகின்ற குடியரசுத் தலைவர், இந்நாட்டின் இரண்டாவது பெரிய இனமான தமிழர்களின் மொழி சம்பந்தப்பட்ட அனைத்துலகம் தழுவிய ஒரு முக்கிய மாநாட்டினைத் தொடக்கி வைக்கும்படி விடுக்கப்பட்ட வேண்டுகோளை நிறைவேற்றி வைக்க முன்வராதது — தமிழர்கள் இலங்கையில் புறக்கணிக்கப்பட்ட ஒரு இனத்தினராகவே வாழுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறதென்று வெளிநாட்டார் கருதுவதற்கு இடம் வைக்கிறது.

## சிங்கள மயம்

அரசாங்க தேசிய கூட்டுறவுச் சபையின் நிர்வாகத்திலிருக்கும் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தையும், மற்றும் அரசாங்க பாடசாலை மண்டபங்களையும் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வழங்கக்கூடாதென அரசு உத்தரவிட்டுள்ளதாக நாளேடுகளில் வருகின்ற செய்திகள், தமிழுக்கும் தமிழருக்கும் எதிரான இந்த அரசாங்கத்தின் துவேஷத்தனமான போக்கையே தோலுரித்து காட்டுகின்றன. அத்துடன், தேசியமயம் என்பது தமிழர்களை எவ்வளவு தூரம் பாதித்துள்ளது என்பதையும் விளக்குகிறது.

மறைந்த அமரர் நாகநாதன் அடிக்கடி கூறுவார்— 'In this Country, Nationalisation means Sinhalisation' என்று. அதாவது இந்நாட்டில், தேசியமயம் என்பதன் பொருள் சிங்களமயம்' என்று கூறுவார்.

கூட்டுறவுச் சங்கங்களையும் அரசாங்கப் பாடசாலைகளையும் அரசு பொறுப்பேற்ற பின்னர், அவை சிங்களமயமாகிவருகின்றன; சிங்கள மொழி திணிக்கப்படுகிறது; அரசாங்கப் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்கள் நுழைக்கப்படுகின்றனர்.

இப்போது, அரசியல் சார்பற்ற தமிழ்மொழி ஆராய்ச்சி மாநாட்டுக்குக் கூட, தமிழ் பாடசாலை மண்டபங்களையும், மற்றும் வீரசிங்கம் மண்டபம் போன்ற, கூட்டுறவு முறையில் தமிழர்கள் தங்கள் சொந்தப் பணத்தில் கட்டிய கட்டிடங்களையும் தரமுடியாது என்று அரசு மறுக்கிறதென்றால், 'தேசியமயம்' தமிழனை எவ்வளவு தூரம் பாதித்துள்ளது என்பது புரிகிறதல்லவா?

# உடுவில் பா. உ. வின் அரசியல் வெள்ளி விழா

உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் பொது வாழ்வில் ஈடுபட்டு 25வது ஆண்டு நிறைவடைவதையொட்டிய வெள்ளி விழாக் கொண்டாட்டம் 30-12-73ல் உடுவில் கிராம சபை திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவுக்கு உடுப்பிட்டி முன்னாள் பா. உ. திரு. மு. சிவசிதம்பரம் தலைமை வகிக்கிறார். தமிழரசுக் கட்சித் தலைவர் நாவலர் அமிர்தலிங்கம் வெள்ளிவிழா மலரை வெளியிட்டு உரை நிகழ்த்துவார்.

இ. தொ. கா. தலைவர் திரு. எஸ். தொண்டமான் உட்பட பலர் இவ்விழாவில் உரை நிகழ்த்துவர்.

# பொறியியல்...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்த நடைமுறை மருத்துவம், பொறியியல் துறைக்கு மட்டுமேயிருக்குமாம்.

எல்லாமாக 13,000 பரீட்சார்த்திகள் இப்போது பல்கலைக்கழக அனுமதியை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்கள்;

—இந்த விபரங்களை அரசாங்க சார்பு 'சிலோன் டெய்லி நியூஸ்' 'சிலோன் ஒப்சேவர்' 19-12-73 இதழில் வெளியிட்டுள்ளது.


வெளிவந்து விட்டது!

லிங்கன் வெளியீட்டாரின் பொப் இசைப் பாடல்கள்

சின்னமாமி புகழ் நித்தி கனகரத்தினம் M.S. பெர்னண்டோ, S. ராமச்சந்திரன், மெல்லிசை மன்னன் பரமேஸ்கோணேஸ்பாடிய பாடல்கள் அடங்கியது.

விலை சதம் 75 மட்டும். வியாபாரிகளுக்கு 55 சதம். V. P. P.யில் அனுப்பப்படும்.




ஆனந்த புத்தகசாலை,

M. S. லிங்கம், 57, பஞ்சிகாவத்தை, மருதானை.



நத்தார் வாழ்த்துக்கள்

அனைவருக்கும் எமது உளங்கனிந்த நத்தார் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

25 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பி "காந்தி நிதிக்கலண்டர்" ஒன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்.

த. பெ. எண். 77, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

- கொலைகாரனுக்குள்ள சலுகைகூட தமிழ் இளைஞர்களுக்கு இல்லையா?
- இருக்கும் நீதிமன்ற மொழிச் சலுகையைக்கூடப் பறிக்கமுயலுகிறீர்கள்!
- கள்ளிறக்கும் தொழிலாளர்களின் கண்ணீரைத் துடையுங்கள்!!
- அரிசி வாங்க வரும் தமிழர்களுக்கு அடிவிழுவதற்குக் காரணம் என்ன?

# பேரவையில் நவம் முழக்கம்!

"இந்நாட்டில் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு, றிமாண்ட் சிறையில் வைக்கப்பட்டவனுக்குக்கூட சில சலுகைகள் இன்றைய சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது அப்படிப்பட்ட ஒருவன் மீது மூன்று மாதங்களுக்குள் வழக்குத் தாக்கல் செய்யப்படவேண்டும்—அப்படி வழக்குத் தாக்கல் செய்ய முடியாவிட்டால் அவனைப் பிணையில் செல்ல அனுமதிக்கவேண்டும் என்று சட்டம் சொல்கிறது.

மூன்று மாதத்துக்குள் வழக்குப் போட்டு, அது முடியாமல் விட்டாலும், குற்றம் சுமத்தப்பட்டவனுக்கு பிணையில் செல்ல உரிமையுண்டு.

கொலைக்குற்றம்நிரூபிக்கப்பட்டால்மரணதண்டனையை அனுபவிக்கவேண்டிய கைதிகளுக்கே இவ்வளவு சலுகைகள் தரப்பட்டுள்ளன இன்றைய சட்டங்களின் கீழ்.

ஆனால், எந்தவித குற்றச்சாட்டும் இன்றி, நீதி விசாரணையுமின்றி கடந்த ஒன்றரை வருடகாலமாக 42 தமிழ் இளைஞர்கள் வெலிக்கடைச்சிறையிலும், நீர்கொழும்புச் சிறையிலும், கண்டிச் சிறையிலும் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்களை இப்படி அடைத்து வைத்திருப்பது சட்டம், மனச்சாட்சி, ஒழுக்கம், தார்மீகம், மனிதப்பண்பாடு, மனித உரிமை அனைத்துக்கும் முரணானதும், அவற்றைக் குழிதோண்டிப்புதைப்பதுமாகும்.

இந்த இளைஞர்கள் குற்றம் செய்திருந்தால், அவர்களை நீதிமன்றத்துக்கு கொண்டு வாருங்கள். விசாரணையை நடத்தி தண்டனை விதியுங்கள். அப்படிச் செய்வதற்கு முடியாவிட்டால், விடுதலை செய்யுங்கள் என்றுதான் நாம் கேட்டு வருகிறோம்.

எந்த விதக்குற்றமுமில்லாத நிலையில் — சிறையிலடைத்து வைத்து இந்த இளைஞர்களின் வாழ்வை அழிப்பதற்கு உங்களுக்கு உரிமையில்லை."

"புதிய நீதி நிர்வாக மாற்றத்தின்படி வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மூன்று நீதிமன்றங்களின் நிர்வாகத்தையும், அனுராதபுர உயர்நீதி மன்றத்தின் கீழ் கொண்டுவர முடிவு செய்திருப்பது—நீதி நிர்வாகத்தை மட்டுமல்ல — தமிழ் பேசும் மக்களின் அடிப்படை மொழி உரிமையையும் பாதிப்பதாகும்.

அரசியலமைப்பிலும், அண்மையில் நிறைவேற்றப்பட்ட நீதிமன்றமொழி சட்டத்திலும், தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட சிறு மொழிச் சலுகைகூடஇந்தப் புதிய மாற்றத்தினால் பறிக்கப்படுகிறது.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மூன்று பகுதிகளும், தமிழ் பேசும்மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகள். இவர்களது வழக்குகள் தமிழில் விசாரிக்கப்பட வேண்டியவை சிங்கள மொழியில் இயங்கும் அனுராதபுர உயர் நீதிமன்றத்தின் கீழ் இவற்றைகொண்டு வந்தால், தமிழில் எப்படி விசாரிக்க முடியும்?

அனுராதபுர உயர் நீதிமன்ற நீதிபதி, தமிழில் நடைபெறும் வழக்குகளில் பங்கு கொள்ள முடியாதவராகவே இருப்பார்.

எனவே, நீதிமன்ற மொழி விடயத்தில் தமிழ் மக்கள் இன்று அனுபவிக்கின்ற சிறிய சலுகையையாவது பறிக்காமல்பாதுகாப்பதற்கு அரசு விரும்பினால்—முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மூன்று பகுதிகளின் நீதி நிர்வாகத்தை யாழ் மாவட்ட உயர் நீதிமன்றத்தின் கீழ்கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

(நீதியமைச்சு மானியம் மீது பேசியவை.)

"மரவரிமுறையைமாற்றி தவறான முறையை அரசு கொண்டு வந்த போது—அது கள்ளிறக்கும் தொழிலாளர்களை வெகுவாகப் பாதிக்கும் என்ற காரணத்தினால் இச் சபையில் நாங்கள் எதிர்த்தோம்.

ஆனால், பின்னர் அது சட்டமாக வந்து விட்ட காரணத்தினால், கள்ளிறக்கும் தொழிலாளர்களுக்கு உதவும் நோக்குடன், தொழிற் சங்கங்களை நிறுவ ஒத்துழைப்பு அளித்தோம்.

ஒரு கள்ளிறக்கும் தொழிலாளி இன்றைக்கு நூறு ரூபாவுக்குள் மட்டுமே சம்பாதிக்கமுடிகிறது. அரசாங்கம் வாக்குறுதி கொடுத்தது போல, ஊழியர் சேமலாப நிதியோ, ஆபத்து காலச் சகாயநிதியோ இத்தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை.

எத்தனையோ இடங்களில் விற்பனை செய்யப்படுவதிலும் பார்க்கக் கூடுதலான கள்ளு உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்தக் கூடுதல் கள்ளை பயன்படுத்துவதற்கு வழி காணப்படவில்லை.

நிதியமைச்சர், வடி சாராயத் தொழிற்சாலை, போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை எல்லாம் நிறுவப் போகிறேன் என்று கூறினார் எதுவும் நடைபெறவில்லை.

இன்றைக்கு விலைவாசி உயர்வால் வாழ்க்கைசெலவு பெருகுகிறது. இதன் காரணமாக, தோட்டத் தொழிலாளி உட்பட அனைவருக்கும் ரூபா 20 மேலதிகமாக வழங்கப்படவேண்டுமென சட்டம் போடப்பட்டிருக்கிறது. ஆனால் கள்ளிறக்கும் தொழிலாளிக்கு இந்த சலுகை கூட இல்லை. அவனது வருமானம் குறைந்தது மட்டு மன்றி — மேலதிக வருமானமும், மறுக்கப்பட்டுள்ளது.

எனவே எல்லாக் கள்ளுச் சங்கங்களும், தன் கீழ் பணியாற்றும் கள்ளிறக்கும் தொழிலாளர்களுக்கு இருபது ரூபா மேலதிகமாக கொடுக்க வேண்டும் என்று உத்தரவு இடப்பட வேண்டும் என்று நிதியமைச்சரைக் கோருகிறேன்.

மரவரிக் காலத்தில், பத்து ரூபா வரியாக அறவிடப்பட்டது. ஆனால்இப்போதோகள்ளுற் பத்திக்கு 72 ரூபா வரி அறவிடப்படுகிறது. இதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் அரசாங்கத்தின் வருமானத்தை கூட்டுவதிலே கவனமாக இருக்கிறார்களே தவிர — தொழிலாளிக்கு வசதி செய்து கொடுக்கிறார்களில்லை.

எனவே 72 ரூபாவாக உள்ள வரியை 36 ரூபாவாக குறைக்க வேண்டுமெனக் கோருகிறேன்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணத்திலே அரிசி விலை அகோரமாக உயர்ந்துள்ளதன் காரணமாக — பசிக்கொடுமை தாங்காது அங்குள்ள தமிழ் மக்கள் தென்னிலங்கைக்கு மலிவாக அரிசி வாங்கலாமென்று எண்ணி வருகிறார்கள். அப்படி வந்து வாங்கிக்கொண்டு போகும்போது, வழியிலே அவர்களை மறித்து சிங்களவர்கள் அடிக்கிறார்கள்; உதைக்கிறார்கள். அரிசியை பறிக்கிறார்கள்;

ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? அவர்களும் இந்நாட்டவர்கள்தானே என்று ஒருவர் கேட்டபோது — அந்தச் சிங்களவர்கள் சொன்ன காரணம், யாழ்ப்பாணத்தார் இங்கிருந்து அரிசியை வாங்கிக்கொண்டு போய் 'இந்தியாவுக்கு கடத்துகிறார்கள் என்பதுதான்!

இந்த அளவுக்கு இப்படிப்பட்ட ஒரு கருத்து கிராமப்புறத்து சிங்கள மக்களின் மனதிலே இன்றைக்கு திணிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்து, அவர்கள் மனதிலே ஏற்படக்காரணம் பொறுப்பு வாய்ந்த சில அமைச்சர்கள் தேசியப் பேரவையின் உள்ளும் புறமும் இந்தியாவுக்கு அரிசி கடத்தப்படுவதாக கூறிவருவதுதான்!

நிதியமைச்சர் அவர்களுக்கு பிடிபட்ட கள்ளக் கடத்தல் பொருட்கள் என்னென்ன என்பது தெரியும். அப்படிப் பிடிபட்ட, பறிக்கப்பட்ட கள்ளக் கடத்தல் பொருட்களிலே, அரிசியும் இருந்த துண்டா? கள்ளக் கடத்தலில் எப்போதாவது அரிசி பறி முதல் செய்யப்பட்டதுண்டா?

இதற்கு நிதியமைச்சர் திட்டவட்டமான முறையில் பகிரங்கமாக இந்தச் சபையில் பதிலைக் கூறினால், சிங்களவர்களின் மனதிலுள்ள சந்தேகம் தீரலாம்— இந்தப்பிரச்சினைக்கும் முடிவு காணலாம்.

(நிதியமைச்சு மானியம் மீது பேசியவை.)

## ஈழத் தமிழர்...

(5ம் பக்கம் தொடர்ச்சி)

எனவே எங்கு தமிழினம் வாழ்கிறதோ அங்கே தமிழ் பண்பாடும் பிரிக்க முடியாத அளவு அதனுடன் பின்னிக் கிடக்கிறது. ஆகவே இலங்கைத் தமிழர்களை தமிழ் நாட்டில் வாழும் தமிழரிடமிருந்து பிரித்து தமிழ்ப் பண்பாட்டின் முக்கிய ஊற்றினைத் தடை செய்வது எவ்விதத்திலும் தவிர்க்கப் படவேண்டும்.

சஞ்சிகைகள், வெளியீடுகள் ஆகியவற்றின் இறக்குமதியைத் தடை செய்வது இப் பண்பாட்டுப் பிணைப்புக்குப் பங்கம் விளைவிப்பதுடன் நாம் விரும்பாத விளைவுகளையும் ஏற்படுத்தக் கூடும்.

கொழும்பு விவேகானந்த சபையினர், இந்திய புத்தகங்கள், சஞ்சிகைகள் இறக்குமதி குறித்து கலாசார அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள நீண்ட மகஜர் ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

## எமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட உலக நாடுகளின் ஆதரவைத் திரட்டுவோம்!

### உடுவில் பா. உ. விடுதலை முழக்கம்!

"வரலாற்றின் துவக்க காலத்திலிருந்து, இந்நாட்டில் தமிழினமும் சிங்கள இனமும் தனித்தனி அரசுகளை நடத்திவந்துள்ளன.

1833ம் ஆண்டுதான் ஈழத் தமிழ் நாடும், சிங்கள நாடும் 'இலங்கை' என்ற பொதுவான அமைப்புக்குள் வெள்ளைக்காரர்களால் நிர்வாக வசதி கருதி ஒன்றாக இணைக்கப்பட்டன.

1948ம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்டபோது சிங்கள மக்களுக்கு பூரண அரசியல் ஆதிக்கம் கிடைத்தது. பிரிட்டிஷ்காரர்கள், சிங்களவர்களுக்கு அரசியல் சுதந்திரத்தைக் கொடுத்ததுமட்டுமல்ல — ஈழத் தமிழ் நாட்டை அவர்கள் ஆளுவதற்கான ஒரு 'காலனி' நாடாகவும் கொடுத்துவிட்டார்கள்.

சுதந்திரம் கொடுக்கப்பட்டபோதுபிரிட்டிஷ்காரர்களுக்கு 'அமைச்சர் சபை' கொடுத்திருந்த உறுதி மொழிகளுக்கு முரணான வகையில்—சுதந்திரம் வந்த நாள் முதல், தமிழர்களின் அரசியலுரிமைகள் திட்டமிட்டு பறிக்கப்பட்டு வந்திருக்கின்றன.

மலைநாட்டுத் தமிழர்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டு அவர்களிடமிருந்து வந்த பாராளுமன்ற பிரதிநிதித்துவம் பிடுங்கப்பட்டது.

இப்படி அரசியல் ரீதியில் தமிழர் சமுதாயத்தை பலவீனப்படுத்திய பின்னர் தமிழ் மக்கள் மீது பெரும்பான்மை இனம் தனது மொழியைத் திணித்தது.

1972 மே 22ல் வந்தபுதிய அரசியல் சட்டத்துடன், தமிழ் மக்களுக்கிருந்த அற்ப சொற்ப பாதுகாப்புக்களும் பறிக்கப்பட்டு தமிழினம் அடிமையாக்கப்பட்டு விட்டது.

அடிப்படை மனித உரிமைகளுக்கு மதிப்புக் கொடுக்காத ரொடீஷிய நாடு உலக அரங்கில் எப்படி ஒதுக்கப்பட்டதோ, அதே போன்று இலங்கையும் ஒதுக்கப்படுவதற்கு நாம் வழிவகுக்க வேண்டும்.

"நமது வருங்காலத்தை நாமே நிர்ணயிக்க வேண்டும் இதற்காக எமக்கு வேண்டியது சுயநிர்ணய உரிமை இந்த உரிமையை நாம்பெறுவதற்கு உலகின் அபிப்பிராயத்தை எங்களுக்குச் சாதகமாகத்திரட்ட வேண்டும்.

"அண்மைக் காலமாக எமது விஷயத்தில் சர்வதேச ஸ்தாபனங்கள், வேற்று நாட்டுப் பத்திரிகைகள் ஆகியன அக்கறை காட்டத் தொடங்கியுள்ளன. இது ஒரு நல்ல அறிகுறி.

"எனவே இந்த சந்தர்ப்பத்தைத் தவறவிடாது உலக நாடுகளுக்கு எமது நிலையை தெளிவுபடுத்த வேண்டும். உலகில் எங்கு எங்கு எல்லாம் மக்கள் ஒடுக்கப்படுகிறார்களோ, அங்கெல்லாம் அடக்கி ஒடுக்கப்படும் மக்களுக்காக நாங்கள் குரல் கொடுப்போம்' எனக் கூறி வரும் எமது பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் கபட நாடகத்தை அம்பலப்படுத்த வேண்டும்.

— இவ்வாறு கொழும்பில் நடைபெற்றமனித உரிமைப் பிரகடனத்தின் 25வது நினைவு நாளில் பேசிய உடுவில் பா. உ. குறிப்பிட்டார்.

## சோஷலிசமாம் சோஷலிசம்!

ஒருவர் 50 ஏக்கர் காணியை தனதுடைமையாக வைத்துக்கொள்ளலாம் என்பதுதான் அரசாங்கத்தின் உச்சவரம்புச் சட்டம்!

ஆனால் தமிழர்களுக்கு இந்தச் சட்டம் செல்லுபடியாகாதுபோலும்!

கலகா நகருக்கருகில்உள்ள 'கிரீன்வெளி' என்ற 84 ஏக்கர் கொண்ட தேயிலைத் தோட்டத்தினை ஆறு தமிழர்கள் சேர்ந்து வாங்கியிருந்தார்கள் 1965ம் ஆண்டு — இந்தத் தோட்டத்திலேயே வீடுகட்டி வாழ்ந்தும் வேலை செய்தும் வருகிறார்கள் இவர்கள்.

அனைவரும் இலங்கைப் பிரஜாவுரிமையுள்ளதமிழர்கள். அரசாங்கத்தின் நில உச்சவரம்புச் சட்டத்தையும் இவர்கள் மீறவில்லை!

இவர்களிடமிருந்து இந்த காணியைப் பறித்து இவர்களை அங்கிருந்து துரத்திவிட அரசாங்க மட்டத்தில் இப்போது சதிகள் நடக்கிறதாம்!

ஆம் தமிழனுக்கு ஒரு நீதி-சிங்களவனுக்கு ஒரு நீதி— இதுதான் 'சிறீலங்கா சோசலிசம்'!

## அஞ்சலி!

அமரர் திரு. வி. அ. அழகக்கோனின் இறுதி யாத்திரையில் அரசாங்க எழுதுவினைஞர் சங்க மன்னார்க் கிளை உறுப்பினர்கள், கலந்து கொண்டு மலர் வளையம் வைத்து இரங்கல் அனுதாபச் சொற்பொழிவாற்றி அஞ்சலி செலுத்தினர்.

இறுதி யாத்திரை ஊர்வலத்தின் போது அனுதாப இரங்கல் துண்டுப் பிரசுரம் ஒன்றையும் வீதிகள்தோறும் விநியோகம் செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துலக மாநாடு என்றால்-அது தலைநகரில்தான் நடக்க வேண்டுமா?

## லக்ஸ்மன் ஜெயக்கொடிக்கு ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவை பதில்!

## தமிழ்பண்பாட்டின் பெருமையை அறிந்திட யாழ்ப்பாணம் வருமாறும் அழைப்பு!

சனவரியில் நடைபெற விருக்கும் தமிழாராய்ச்சி மாநாடு, அனைத்துலகத்தையும் தழுவியுள்ள, அனைத்துலக மாநாடு என்பதால், அது இலங்கையின் தலைநகரிலேயே நடைபெற வேண்டுமென்றும், அப்படி நடந்தால் மட்டுமே, அரசு அதற்கு ஒத்துழைப்பும், ஆதரவும் அளிக்க முன்வரும் என்றும், அண்மையில் பத்திரிகையாளர் மாநாட்டில் பாதுகாப்பு வெளிவிவகார பதில் அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடி தெரிவித்திருந்த கருத்தை மறுத்து, 'ஈழத் தமிழ் எழுத்தாளர் பேரவை' பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளது

(1) அனைத்துலக மாநாடுகள் அனைத்தும் ஒரு நாட்டின் தலைநகரில்தான் நடைபெற வேண்டும் என்று திரு. லக்ஸ்மன் ஜெயக்கொடியும் 'டெயிலி நியூஸ்' செய்தி இதழும் தெரிவித்துள்ள கருத்து, எமது பேரவையை பொறுத்தவரை பொருத்தமான கூற்றாக அமையவில்லை என்று பணிவுடன் கூற விரும்புகிறோம்.

காரணம், பின்வரும் அனைத்துலகம் தழுவிய மாநாடுகள் அனைத்தும் உலக நாடுகளின் தலைநகரங்களில் நடைபெறாது ஏனைய நகரங்களிலேயே நடைபெற்றுள்ளன.

(அ) 1973ம் ஆண்டின் அனைத்துலக மக்கள்தொகை விஞ்ஞான ஆய்வு சம்பந்தப்பட்ட மாநாடு, (Congress of the International union for the scientific study of population 1973) பெல்ஜியத்தின் தலைநகரான 'பிரசல்ஸ்' இல் நடைபெறவில்லை: 'லீக்' எனுமிடத்திலேயே நடைபெற்றது.

(ஆ) 1973-ம் ஆண்டின் அனைத்துலக ஸ்பெலியோலொஜிக்கல் மாநாடு (International Speliological Congress 1973) செக்கோசிலவேக்கியாவின் தலைநகரான் பிரேக்கில் நடைபெறவில்லை ஓலுமொச் (oloumouc) எனுமிடத்திலேதான் நடைபெற்றது.

(இ) 1973ம் ஆண்டின் நீர் ஆய்வு மாநாடு International Congress of thewater research Association) சிக்காகோவில் தான் நடைபெற்றது— அமெரிக்க தலைநகரான வாஷிங்டனில் நடைபெற்றதில்லை.

(ஈ) 1973ம் ஆண்டின் அனைத்துலக தொழிற்சங்கங்களின் மாநாடு (International trade union Congress of 1973) பல்கேரியத் தலைநகரான சோஃபியாவில் நடைபெற்றதில்லை — வர்ன (varna) எனுமிடத்திலேயே நடைபெற்றது.

(உ) ஐ. நா. வின் ஆதரவுடன் நடைபெற்ற 1973-ம் ஆண்டின் நில நீர் பற்றிய ஆராய்ச்சி மாநாடு (Internatoinal Symposium on Development of Ground water resources-1973—U. N. supported) இந்தியத்தலைநகரான புதுடெல்லியில் நடைபெறவில்லை — சென்னையிலேயே நடைபெற்றது.

(ஊ) பிரசித்தி பெற்ற பாண்டுங் மாநாடு, இந்தோனேசியத் தலைநகரான ஜாகர்த்தாவில் நடைபெறவில்லை; பாண்டுங்கில்தான் நடைபெற்றது.

(எ) 1968ம் ஆண்டில் நடைபெற்ற அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு இந்தியாவின் தலைநகரான புதுடெல்லியில் நடைபெறவில்லை — சென்னையிலேயே நடைபெற்றிருக்கிறது!

### பாதுகாப்பு

(2) இக்காரணங்கள் தவிர தமிழர் பெரும்பான்மையாக வாழும் யாழ்ப்பாணத்தில் இம் மாநாட்டை நடாத்துவதே சாலவும் சிறப்புடையது என்பது எம் கருத்து. எம்மைப் பொறுத்தவரை யாழ்ப்பாணத்தையும் ஈழத்தின் ஒரு அங்கமாகவே கருதுகிறோம்.

மற்றும் வெளிநாடுகளில் இருந்து வரும் அறிஞர்களுக்கு கொழும்பில் தான் பாதுகாப்பு அளிக்க முடியும் யாழ்ப்பாணத்தில் அளிக்க முடியாது என்று உதவி பாதுகாப்பு அமைச்சர் கூறுவது, தமது பாதுகாப்பு அமைச்சு பலவீனம் உற்றுள்ளதென்பதை யன்றோ எடுத்துக்காட்டுகிறது.

எனினும் எம்மைப் பொறுத்தவரை அத்தகைய பலவீனமுள்ள பாதுகாப்பு அமைச்சாக அது விளங்குகிறதென்று கருதவில்லை.

### தமிழே ஆராயப்படுகிறது

(3) தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் தமிழ் ஆராயப்படுகின்றதேயன்றி தமிழர்களின் உணர்ச்சிகளைத் தூண்டும் முறையில் தமிழரின் வீரம் ஆராயப்படவில்லை. அத்துடன் தமிழர் விடுதலைக்காகப் போரிட தமிழர் கூட்டணியிருக்கிறது. தமிழ் ஆராய்ச்சி மன்றத்தில் தங்கியிருக்கும் அளவிற்கு அது வலிவு குன்றியிருக்கவில்லை. என்றே நாம் நம்புகிறோம்.

(4) எனினும் தமிழனும் மனிதன், மனிதனுக்கு சில இயற்கை உணர்ச்சிகள் உண்டு. அவற்றுள் இன உணர்வும் மொழியுணர்வும் இயற்கையானவை. அந்த இயற்கை உணர்வுக்கேற்ப தமிழர் தம் இன உணர்வையும் மொழி உணர்வையும் இம் மாநாடு நடைபெறுவதினால் பெற்றால் அதைக் குற்றமெனக் கூற முடியுமா?

(5) இம் மாநாடு அரசியல் கலப்பற்றதின் காரணமாகத் தான் இம் மாநாட்டை திறந்துவைக்குமாறு இந் நாட்டின் குடியரசுத் தலைவரை அழைத்துள்ளனர். அத்துடன் இந் நாட்டின் முதல் அமைச்சர் உட்பட அமைச்சர்கள் தேசியப் பேரவை உறுப்பினர் அனைவரையும் சிறப்பு விருந்தினராக அழைத்துள்ளனர்.

(6) அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையின் இணைச் செயலாளரில் ஒருவரான டாக்டர் கோபாலப்பிள்ளை மகாதேவா ஒரு சிறீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர். இம்மாநாட்டை வரவேற்று வாழ்த்தி செய்தி அனுப்பியுள்ள யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் திரு. துரையப்பா அவர்கள் யாழ்ப்பாண சி. ல. சு. கட்சிக் கிளையின் தலைவர். இவர்கள் மீது கூட அரசாங்கத்திற்கு நம்பிக்கையில்லையா?

(7) தமிழின் வளத்தை சிங்கள அறிஞர் அறிவதற்கு மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றால் வாய்ப்பில்லை என்று கூறுகிறார் திரு லக்ஸ்மன் ஜெயக்கொடி அவர்கள்

ஆனால் இம் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துரை வழங்க ஏற்கெனவே பல சிங்கள அறிஞர் முன்வந்துள்ளனரென ஆராய்ச்சி மன்றத் தலைவர் அறிவித்துள்ளார் அத்துடன் இவ்வறிஞர்கள் ஒப்படைத்துள்ள கட்டுரைகள் பல தமிழ்—சிங்கள உறவைக் கூட வற்புறுத்தும் முறையில் அமைந்துள்ளன என்றும் அறிகின்றோம்.

(8) இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் தமிழர் இயல்பையும் — செல்விருந்து ஓம்பி வருவிருந்து காத்திருக்கும் தமிழர் விருந்தோம்பும் பண்பையும் காண திரு லக்ஷ்மன் ஜெயக்கொடி உட்பட தேசியப் பேரவை உறுப்பினர் அனைவரையும் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டுமென்று ஈழத் தமிழ் எழுத்தாளர் பேரவை அழைக்கிறது.

---

## புதிய நாடகம் 'ராதா'!

தமிழ் சிங்களத் திரை நட்சத்திரம் சந்திரகலாவின் ஐம்பதாவது நாடகமாக அமைகிறது! இலங்கை தேசிய கலா நிலையத்தின் 'ராதா' 23.12.73ல் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் மேடையேறும் 'ராதா' ஒரு நியுவேவ் நாடகமாகும். இதன் கதை-வசனம் டைரக்ஷன் ஆகிய பொறுப்புக்களை முன்னணி இயக்குநரான கலைச்செல்வன் ஏற்றுள்ளார்.

கலைவேந்தன் ஸ்ரீசங்கர் — 'குத்துவிளக்கு' ஆனந்தன் — 'கொள்ளைக்காரன்' புகழ் டீ ஜெரோம் — குணசித்ர நடிகர் எம். ஆர். கலைச்செல்வன்—ஆர். பி. மஹாராஜா 'சலோமி' செல்லையா-மட்டு நகர் இஸ்மாயில் — திரையழகி சந்திரகலா ஆகியோர் பிரதம பாத்திரத்தில் நடிக்கும்—'ராதா' வெற்றி நாடகங்கள் பலவற்றை தயாரித்த இலங்கை தேசிய கலா நிலயத்தின் 24-வது தயாரிப்பாகும்.

---

## போராட்டம்!

மதுபானச் சாலையை<br>
மந்திரியார் திறந்துவைக்க<br>
மாலை வருகின்றார்<br>
—மறுகரை<br>
மாவடிப் பிள்ளையார்<br>
கோயிலிலோ<br>
மங்காத வெளிச்சங்கள்......<br>
மக்களின் ஆரவாரம்<br>
—மறுநாளிரவு<br>
மையிருளைக் கலைப்பதற்கு,<br>
தூண்டா விளக்கொன்று<br>
போராடுகின்றது.

எஸ். கே. எஸ். உதயன்.

---

## —செய்திச் சுருள்—

ஃ சனிபகவானுக்கு ஒரு கால் ஊனம் என்பது அனைவரும் அறிந்த ஒரு இரகசியமாம்!

ஃ தமிழாராய்ச்சி கழக இலங்கைக் கிளையிலும் இரண்டொரு 'சனியன்கள்' இருக்கிறதாம்.

ஃ தமிழாராய்ச்சிக் கிளையில் இருக்கும் ஒரு சனியன் 'திருவும் செல்வமும்' தன் பெயரிலாவது இருக்கிறது என்ற துணிச்சலுடன் பல 'அங்கிடுதத்தி' வேலைகளைச் செய்து பார்த்து இப்போது ஓய்ந்துவிட்டதாம்.

ஃ சூரிய பகவானை விட்டு விட்டு இப்போது இது 'சிமோலின்' கைப் பொடியனாக இருக்கிறதாம்.

ஃ கருணாநிதி ஒரு மாநில முதல் அமைச்சர்தானே — அவருக்கு மாநாட்டுக்கு அழைப்பு அனுப்புவது எப்படி என்று கிளைக் கூட்டத்தில் மற்றோர் சனியன் எகிறிக் குதித்ததாம்.

ஃ செல்வநாயகத்துக்கும் அழைப்பு அனுப்பக் கூடாதெனவும் இது ஆலாய்ப் பறந்ததாம்.

ஃ இந்த 'அபியு'க் தப் பிறவி;' இந்தியாவில் பெற்றோல் சிக்கனத்துக்காக இந்திரா காந்தி பொலிஸ் ஜீப் பாதுகாப்புக்காக வர குதிரை வண்டியில் அண்மையில் பிரயாணம் செய்ததை — கருணாநிதியே அப்படிப் போனதாக விஷயம் புரியாமல் நக்கல் பண்ணி எழுதித்தொலைத்திருக்கிறதாம்.

ஃ பாதுகாப்புக்காக பொலிசார் கூடவே 'ஜீப்'பில் வரவேண்டியிருப்பதால்குதிரைவண்டியில் இந்தியப் பிரதமர் பயணம் செய்வதால் எதுவித பயனுமில்லை என்ற கருத்தை முதன் முதல் வெளியிட்டவரே கருணாநிதி என்பதைக் கூட இது அறியாதது ஆச்சரியம் தானும்!

ஃ அமிர்தலிங்கம் என்ற பெயரைக்கேட்டதும் அமைச்சர் ஒருவர் நடு நடுங்குவது ஒன்றும் ஆச்சரியமானதல்லவாம்!

ஃ உங்களுக்குள் சண்டை பிடித்து நின்றால், அமிர்தலிங்கத்தை தோற்கடிப்பது எப்படி என்று கேட்டு, வட்டுக் கோட்டை தொகுதியில் தமக்குள் மோதி நின்ற இரு எட்டப்பர்களை அண்மையில் இவர் இணைத்து வைத்துள்ளாராம்!

ஃ இவரது கட்சியைச் சேர்ந்த தொழும்புத்துறை இளைச்செயலாளர் தமிழுணர்ச்சி கொண்ட வாலிபர்கள் சிலரால் அண்மையில் மினுக்கப்பட்டாராம்!

ஃ அமிர்தலிங்கம் மலேசியாவுக்கு செல்ல விரும்பது உறவினர்களைச் சந்திப்பதற்காக அல்லவென்றும் — அரசியல் காரணங்களுக்காகவே யென்றும் இந்தப் பிரகிருதி பிரதமருக்கு எழுதியுள்ளாராம்!

ஃ தமிழாராய்ச்சி மாநாட்டை கொழும்பில் நடத்தினால் தான் முன்னுக்கு நின்று தம்மையும் ஒரு 'தமிழ்த் தலைவன்' ஆக வெளிநாட்டவர் கண் முன்னே காட்டிக் கொள்ளலாம் என்று இவர் கண்ட கனவு இப்போது பகல் கனவாகி விட்டதாம்!

ஃ தமிழ் வளர்ச்சிக்காக, வலதுகை கொடுப்பது இடதுகை அறியாமல் தமிழர்கள் வாரி வழங்கியது அந்தக்காலமாம்.

ஃ இப்போது தமிழ் வளர்ச்சிக்காக கொடுத்த பணத்தையே திருப்பி கேட்டு வாங்கும் 'வள்ளல்கள்' நிறைந்துள்ள காலமாம்!

ஃ சில பெரிய மனிதர்கள் தமிழ் வளர்த்த இலட்சணம் இதனால் இப்போது அம்பலத்துக்கு வந்துவிட்டதாம்.

ஃ பதவியிலிருக்கும் போது மட்டும் தமிழுணர்ச்சியும் பதவி பறிபோனதும் நன்கொடையாகக்கொடுத்த பணத்தையே திருப்பிக்கேட்கும் சுயநலமும் கொண்டவர்கள் 'பிரமுகர்களாக' இருப்பது தமிழினம் செய்த பாவமாம்!

ஃ தமது பத்திரிகைக்கு 'விளம்பரம்' கொடுக்காததனால் தான் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு எதிரான செய்திகளை வெளியிடுவதாக ஒரு பத்திரிகை ஆசிரியர் அண்மையில் அவரைச் சந்தித்த சிலரிடம் கூறியிருக்கிறாராம்.

ஃ சுய இலாபத்தை மட்டுமே கருதி, தமிழை நாடுபவர்கள் இவர்கள் தானும்.

ஃ சுய இலாபம் கிடையா விட்டால் தமிழ் இனம் எக்கேடு கெட்டாலும் இவர்களுக்கு கவலையில்லையாம்!

ஃ செனட்டர் பதவி கிடைக்காததால் தான் சார்ந்து நின்ற கட்சியையும் தமிழினத்தையும் காட்டிக்கொடுத்தவரும் இவர்தானும்!

—கொண்டோடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது


4வது வெற்றி வாரம்

செல்லமகால் (கொட்டாஞ்சேனை)

ஜெய்சங்கர், சோ,

தேங்காய் சீனிவாசன், எம். ஆர். ஆர். வாசு,

பாரதி, என். எம். ராஜம் —நடித்த

# உனக்கும் எனக்கும்

இரண்டாவது வெற்றி வாரம்!

கெயிட்டி

ஜெய்சங்கர், நாகேஷ்,

வி. கே. ராமசாமி, எஸ். வி. சகஸ்ரநாமம்,

வி. எஸ். ராகவன், லட்சுமி, ரமாபிரபா,

காந்திமதி, பார்வதி —நடித்த—

# நவாப் நாற்காலி

இரண்டாவது உணர்ச்சிமயமான வாரம்



வெற்றிகரமாக காட்சியளிக்கிறது

சென்ட்ரல் (மருதானை) 2, 6, 9.30

ஞாயிற்றுக் கிழமை 10, 2, 6, 9.30

நூறு நாட்களுக்கு மேல் ஓடிய விறு விறுப்பான படம்!

பொப் இசை நிறைந்தது அபிமான நட்சத்திரங்கள்

சிவாஜிகணேசன், ஜெயலலிதா

— நடித்த —

# பட்டிக்காடா பட்டணமா

(புதிய கொப்பி) (பாஸ்கள் ரத்து)



28-ம் திகதி வெள்ளி முதல்

லிடோ யாழ்நகர்

ஏ. வி. எம். ராஜன், நாட்டிய திலகம் நிர்மலா,

சசிகுமார், ஸ்ரீகாந்த், பண்டரிபாய், டி. கே. பகவதி,

சந்திரபாபு—மனோரமா நடித்தது

நஹதா அளிக்கும்

# அவள் (ஈஸ்ட்மென் கலர்)

டைரக்ஷன்: ஏ. சி. திருலோகச்சந்தர் எம். ஏ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் [illegible] கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1973ம் வருடம் டிசம்பர் மாதம் 23-திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.